இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
FIAT JUSTITIA RUAT COELUM

2022.12.31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான

ஆண்டறிக்கை

1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவக சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கு அமைய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆண்டறிக்கை

2022

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

இலங்கை

நோக்கு

சகலருக்கும் நம்பகமான, பக்கசார்பற்ற, சுகந்திரமான, பயனர் நேயமுள்ள மற்றும் அணுகக் கூடிய நீதித் துறை முறைமையை அடைவதற்கு நீதிபதிகளின் தொழில் வாண்மை நிபுணத்துவத்தை மேம்படுத்தி, அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக நீதிபதிகளுக்கு நீதித் துறை சார்ந்த பயிற்சிகளை வழங்கியவாறும், மிகவும் உயர் மட்ட பயிற்சிகளையும் ஆய்வு வசதிகளையும் வழங்கியவாறும் மிகச் சிறந்த நிறுவகமாக செயற்படுதல்.

பணி

பல தரப்பட்ட திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளின் ஊடாக நீதித் துறை அலுவலகர்களின் தொழில் ரீதியான நிபுணத்துவத்தையும், நீதித் தரத்தையும் மேம்படுத்துவதற்கு உயர் மட்டத்திலான அறிவையும், திறனையும் நீதித் துறை அலுவலகர்களுக்கு வழங்குவதன் மூலம் நிறுவகத்தின் நோக்கை அடைய செயற்படுவோம்.

அதற்கேற்ப இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பின்வரும் இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு வழங்கியவாறு, சுகந்திரமாக தமது பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் செயற்படுகிறது. அந்த இலக்குகளாவன.

- நீதித் துறை அலுவலகருக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல்.
- ஆய்வுகள், அறிக்கை வெளியீடு மற்றும் தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் நீதித் துறை அலுவலகர்ளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- நீதி மற்றும் சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பில் நீதித் துறை அலுவலகர்களின் கருத்துக்களைப் பரிமாற்ற வசதிகளை வழங்குதல்.
- நீதித் துறை அலுவலகர்களின் தொழில் ரீதியான நிபுணத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அறிவையும், திறனையும் விருத்தி செய்வதை நோக்காக் கொண்டு மாநாடுகள், சம்மேளனங்கள், கருத்தரங்குகள் மற்றும் பணிப்பட்டறைகள் ஒழுங்கு செய்தலும், அவற்றை நடத்துதலும்.
- தாமதங்களை குறைக்கும் போது வழக்கு முகாமைத்துவம் மற்றும் வழக்கு போக்கு முகாமைத்துவத்தின் மூலம் உயர் நலன்களை தரும் அத்தியாயங்களையும், நடைமுறைகளையும் அடைவதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குதல்:
- நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டுக்கான பல்வேறு அம்சங்கள் குறித்தான ஆய்வுப் பணிகளை மேற் கொள்ளுதல்:
- நீதிபதிகளை இலக்காகக் கொண்டு நூலக மற்றும் இணையத் தள அடிப்படையிலான கல்வி வசதிகளை வழங்குதல் மற்றும் சட்டம் சார்ந்த தகவல்களையும், விடயங்களையும் பிரபலப்படுத்தல்.:
- சர்வதேச நீதி நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணிச் செல்லல்:
- நீதி அமைப்பினுள் மக்கள் பொறுப்புக்களையும், நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சலுகை வழங்குதல் குறித்தான சட்ட மறுசீரமைப்புக்கு பங்களிப்பு வழங்குதல்:
- நீதியை நிலைநாட்டுதல் மற்றும் நீதிக்கான அணுகல் குறித்தான தேசிய கொள்கைகள் மற்றும் நடைமுறை விதிகள் போன்றவற்றை மேம்படுத்தி அமுல்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குதல்.

உள்ளடக்கம்

1.	கௌரவ தவிசாளரின் செய்தி	1
2.	கௌரவ பணிப்பாளரின் செய்தி	2 - 3
3.	அறிமுகம்	4-15
4.	இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவம் மற்றும் பணிக் குழு	16-17
5.	இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியம்.....	18-19
6.	பயிற்சித் திட்டங்கள்.....	19-24
7.	இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்திறன்.....	24-25
8.	2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற் பணிகள்.....	26-32
9.	2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை....	33-34
10.	2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்திறன் அறிக்கை	35
11.	2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசு பாய்ச்சல் அறிக்கை	36
12.	2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்களின் மாற்றம் தொடர்பான கூற்று	37
13.	முக்கிய கணக்கியல் கோட்பாடு	38-40
14.	2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான நிதி கூற்று தொடர்பான குறிப்புகள்.....	41-47
15.	சவால்கள்.....	48
16.	நன்றி	49
	பின்னிணைப்பு 1 : கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் கணக்காய்வு அறிக்கை	50-58

தவிசாளரின் செய்தி

பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ மனை
உயர் நீதிமன்றம்
கொழும்பு 12
இலங்கை
தொலைநகல் : + + 94(0) 11 2437534
தொலைபேசி : + + 94(0) 11 24221342
மின்னஞ்சல் : scjlib@sltnet.lk

2022 ஆண்டறிக்கை

கௌரவ பிரதம நீதியரசரின் செய்தி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையை முன்வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் செய்தியை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆண்டறிக்கையில் வெளியிடுவதற்காக முன் வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டறிக்கை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் 2022 ஆண்டினுள் நிறைவேற்றிய பணிகள் தொடர்பான மேலோட்டத்தை வழங்குகிறது.

உலகெங்கிலும் உள்ள பல நிறுவனங்கள் எதிர் கொண்டதைப் போல, இலங்கை நீதிபதிகள் நிறுவனத்துக்கும் 2022 ஆம் ஆண்டில் கொவிட் - 19 தொற்றுப் பரவலின் பின் விளைவுகளை எதிர் கொள்ள நேர்ந்தது. இருப்பினும், சர்வதேச அபிவிருத்தி பங்காளர்களின் தாராள குணத்தால், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு தனது பயிற்சித் திட்டங்களை தொடர்ச்சியாக நடத்திச் செல்ல முடிந்தது. நீதித் துறை அலுவலகர்களின் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்திச் செல்ல இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு முடிந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டேனும், மிக முக்கியமான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதில் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர், ஆலோசகர் மற்றும் நிறுவகத்தின் பணிக் குழுவினர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெருக்கடியான காலப் பகுதியிலும், எமது இலக்கை வெற்றி கொள்வதற்கான விரிவான பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை மக்களுக்கு நியாயமான மற்றும் பயனுள்ள நீதியை நிலைநாட்டக் கூடியதாக நீதித் துறை அலுவலகர்களின் திறன்களையும், அறிவையும் மேம்படுத்த தொடர்ச்சியாக பணியாற்றுதல் எமது அர்ப்பணிப்பாகவும், வாக்குறுதியாகவும் மாறியுள்ளது.

ஒப்பமிட்டது /

ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய
பிரதம நீதியரசர்

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

www.judgesinstitute.lk

இல 80, நீதிமன்ற மாவத்தை, கொழும்பு 12, 01200 இலங்கை.

2022 ஆண்டறிக்கை தொடர்பாக
இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கௌரவ பணிப்பாளரின் செய்தி - 2022

2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்குகளை முன் வைக்க முடிந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தைப் போலவே அதன் முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள், ஆலோசகர்கள், அலுவலகர்கள் மற்றும் நிறுவகத்தின் பணிக் குழு அயராது, விடாமுயற்சியுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றியதை இந்த அறிக்கை நன்கு பிரதிபலிக்கிறது. 2022 ஆம் ஆண்டும் கொவிட் - 19 தொற்றுப் பரவல் நிலையின் பின் விளைவுகளின் பாதிப்புக்களுடன் ஆரம்பமானது. இந்த விளைவுகள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கும், மற்றைய பிற நிறுவனங்களின் பணிகளுக்கும் தடைகளை ஏற்படுத்தின. இருப்பினும், இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது பயிற்சி வேலைத் திட்டங்கள் குறிப்பாக ஒரு கருப் பொருள் விடய விதானத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், அந்த விடய விதானம் தனித் தனி நபர்களின் சுகந்திரத்தில் மிகவும் உணர்திறனைக் கொண்ட விடயமாக அமைந்ததுடன், அதில் பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும் பாதுகாத்தல், பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைகள், சிறைச்சாலை கைதிகளின் நெரிசல், கைதிகளை குரூரமாகக் நடத்துதல், மருத்துவ – சட்ட நடைமுறைகள், பிணை வழங்குதல் மற்றும் தண்டனை விதித்தல், கணனிக் குற்றங்கள் மற்றும் மின்னியல் ஆதாரங்கள், பாலின நீதி, சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் மற்றும் மேல் நீதிமன்ற முன் விளக்க மாநாட்டு நடைமுறைகள் அடங்கலாக மேல் நீதிமன்றத்தின் நடைமுறை ரீதியான தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

நாட்டில் நிலவும் சூழ்நிலையின் காரணமாக, பல நிதி வரம்புகள் விதிக்கப்பட்ட போதிலும், நீதித் துறை அலுவலகர்களின் அறிவையும், திறனையும் விருத்தி செய்யும் பணிகளைத் தொடர்ச்சியாக மேற் கொண்டு செல்வதற்கு, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐரோப்பிய பேரவை, மெக்ஸ் ப்லென்க் மன்றம், சட்ட வல்லுனர்களின் சர்வதேச ஆணைக்குழு போன்ற கொடை உள்ளம் கொண்ட சர்வதேச பங்காளர்களின் ஆதரவு கிட்டியமை இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பெற்ற பெரும் பெறாகும்.

ஆண்டின் தொடக்கத்தில், இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நுண் மென் பொருள் அணிகளின் மேடை (Micro Soft Teams Platform) ஊடாக திறன் விருத்தி பயிற்சி திட்டங்களைத் தொடர்ச்சியாக மேற் கொண்டு சென்றதுடன், கொவிட் தொற்றுப் பரவல் நிலையினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டதால் நிறுவக வளாகத்தினுள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முயற்சித்தது. 2022 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மேல் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், நீதவான்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தவிசாளர்கள் ஆகியோரை இலக்கு வைத்து நிகழ் நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக (இணையம்) 07 பயிற்சி திட்டங்களையும், 18 வதிவிட செயலமர்வுகளையும் நடத்தியது. அத்துடன், புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் ஆகியோர் பதவியேற்பு ஏற்றதனால், புதிய பதவியைப் பழக்கப்படுத்துவதற்கு 21 பயிற்சி தொடர்களையும், புதிதாக நியமிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு புதிய பதவி குறித்தான அறிமுகப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

இறுதியாக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபை தவிசாளர் கௌரவ பிரதம நீதியரசர் அவர்களும், அந்த நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையின் ஏனைய உறுப்பினர்களான கௌரவ நீதிபதிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் இங்கு தெரிவித்துக் கொள்ள

விரும்புகிறேன். இந்த வருடத்தினுள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் அனைத்தும் இந்த முகாமைத்துவச் சபையின் தொலை நோக்கு மற்றும் செயற்பணியை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அத்துடன் நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் அவரது ஆர்வமிக்க பணிக் குழுவினால் பெற்றுத் தந்த ஆதரவை பாராட்டுவதற்கான வாய்ப்பாக இதனைக் கொள்கிறேன்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிக் குழுவுடன் பணியாற்றக் கிட்டியமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதுடன், அதனை நான் பெற்ற பேறாகவும் கருதுகிறேன். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் இலக்கை அடைவதற்கு இந்தப் பணிக் குழு மிகுந்த அர்ப்பணிப்புடனும், முடிவுகளை அடைவதற்கு உறுதியுடனும், ஆர்வத்துடனும் பணியாற்றியதை இறுதியாக இங்கு கூறிக் கொள்ளுவதில் பெருமைப்படுகின்றேன்.

ஒப்பமிட்டது /
நீதிபதி மகிந்த சமயவர்த்தன
பணிப்பாளர்
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

தலைவர்) கௌரவ பிரதம நீதியரசர் ஜே. சீ. ஜயசூரிய (ஜனாதிபதி சட்டத்தரணி)
பணிப்பாளர்) +94(0) 11 2 437 528 அலுவலகம்) +94(0) 11 2 541 193 மின்னஞ்சல்) slji.information@gmail.com
கல்வி இணைப்பாளர்) +94(0) 11 2 543 401 தொலைநகல்) info@judgesinstitute.lk

அறிமுகம்

இலங்கை பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட "1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டத்தின்" மூலம் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தாபிக்கப்பட்டது. நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபித்தமைக்கும், அதனுடன் தொடர்புடைய துணையான விடயங்களுக்கும் இந்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நோக்கங்கள்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபித்தமைக்கான நோக்கங்கள் பின்வருமாறு.

1. நீதி மற்றும் சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பில் நீதித் துறை பதவியணியினர் சுகந்திரமாக தமது கருத்துக்களையும் யோசனைகளையும் பரிமாறிக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் :

2. நீதித் துறை பதவியணியினரின் தொழில் வாண்மை திறனை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அறிவையும், ஆற்றல்களையும் விருத்தி செய்யும் நோக்குடன் கூட்டங்களையும், மாநாடுகளையும், விரிவுரைகளையும், செயலமர்வுகளையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தல் மற்றும் அவற்றை நடத்துதல்.

3. நீதியை நிறைவேற்றுவது குறித்தான பல தரப்பட்ட பிரிவுகள் தொடர்பில் பயிற்சிகளையும், ஆய்வு பாடநெறிகளையும் தயாரித்தலும், நடத்துதலும்.

4. நீதித் துறை பதவியணியினருக்கு நூலக வசதிகளையும், ஏனைய கல்வி உபகரணங்களையும் வழங்குதல்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாற்றுப் பின்னணி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டக் கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றுடன், அவர்களது தொழில் தரங்களை மேம்படுத்துவதில், இலங்கை நீதிபதிகள் நிறுவகம் இலங்கையினுள் தனியான ஒரேயொரு சட்ட நிறுவகமாக தனித்துவமாக விளங்குகிறது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்தற்கு முன்னர் புதிய நியமனங்களைப் பெற்ற இலங்கை நீதித் துறை பதவியணியினருக்கு சட்டம் சார்ந்த விடயங்களை பயிலுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் போது, தீர்ப்பளிக்கும் நீதிபதிக்கு அருகில் சில வாரங்கள் அமர்ந்திருந்து நீதிமன்றத்தின் பணிகளை அவதானித்தல் போன்றவையே அவர்கள் கடமையைப் பொறுப்பேற்பதற்கு முன் கிடைத்த ஒரேயொரு பயிற்சியாக இருந்தது. நீதியை நிலைநாட்டும் நீதிபதிகள் தமது நீதித் துறை வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்பு மட்டுமன்றி, அவர்களின் வாழ்நாள் முழுவதும் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நாம் திடமாக நம்புகிறோம். அதற்கமைய சகல மட்டங்களிலும் உள்ள நீதித் துறை பதவியணியினருக்கு முறையானவாறு பயிற்சிகள் வழங்கும் விதத்தில் அமைந்த முழுமையான மற்றும் தொடர்ச்சியான பயிற்சி நிறுவகத்தை திட்டமிட்டு தாபிக்க வேண்டும் என்பது விரைவில் உணரப்பட்டது.

அன்றைய நீதி அமைச்சின் செயலாளர் பதவியை வகித்த திரு பீ. பீ. ஹேரத் நீதிபதிகளுக்கான நிறுவகத்தை தாபித்தல் தொடர்பான கருத்தை முதல் முறையாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தினார். பிரான்சில் இவ்வாறானதொரு அமைப்பு இயங்குவதை நேரில் கண்ட அவர், 1982 ஆம் ஆண்டில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நாளிதழ் ஒன்றுக்கு அது பற்றிய செய்திக் கட்டுரை ஒன்றை எழுதினார். ஆயினும் வழமை போல இது பற்றி எதுவும் நடைபெறவில்லை என்பதோடு, இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்ட போதிலும், அதற்கு செவிசாய்க்கவில்லை. நீதி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி, நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபிப்பதற்காக முதற் தடவையாக கலந்துரையாடிய திரு பீ. பீ. ஹேரத் அதனை தாபிப்பதற்கு ஊக்கமளிக்கும் நிரந்தரமான, பிரதான சக்தியாகச் செயற்பட்டதுடன், நிறுவகத்தின் பிரதான வலுவான பங்காளரானார்.

அதற்கமைய நீதிபதிகளுக்கு சேவை ரீதியான சட்டக் கல்வியை தொடர்ந்து வழங்குவதற்கு நீதிபதிகளுக்கான நிறுவகம் ஒன்றை தாபிப்பதற்காக செயற்பட்டதுடன், கௌரவ நீதியரசர் திரு ஜே. எப். ஏ. சோசா அவர்கள் 1984 மே மாதம் 02 ஆம் திகதி இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நிதி சிக்கல் குறித்து ஆசியா மன்றத்தின் வதிவிட பிரதிநிதி திரு ஜோன் குயே அவர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது. நிறுவனத்தைத் தாபிப்பதற்கு அதற்குப் பொருத்தமான வளாகத்தை கண்டுபிடித்துத் தேர்ந்தெடுப்பதே அதன் முதலாவது பணியாக அமைந்தது. அதற்கமைய பல்வேறு மாற்றுச் சூழல்கள் இனங்காணப்பட்ட பின்னர், இலங்கை மன்றத்தின் துணை மனை ஒரு வருட காலத்துக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டதுடன், அதற்குத் தேவையான மரத் தளபாடங்களையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டன. இவை அனைத்தும் ஆசியா மன்றத்தின் நிதி அனுசரணையின் ஊடாக மேற் கொள்ளப்பட்டன. அதன் பின் சில மாநாடுகள் நடத்தப்பட்ட போதிலும், அரச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை நிலவியதால், சந்தர்ப்பத்துக்கமைய மட்டுமே நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அமைச்சரவை பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அரச அங்கீகாரத்தைப் பெற்ற முடியுமா என்பது தெளிவான விடயமாக இருக்கவில்லை.

உயர் மட்டத்திலான சில விரிவுரைகள் நடத்தப்பட்டதுடன், அந்த உரைகள் மிகவும் உயர் மட்டத்திலான தரத்தைக் கொண்டதாக அமைந்தது. இந்த விரிவுரைகளில் கௌரவ பிரதம நீதியரசர் திரு கிலிபெர்ட் வொலஸ் சிறப்பு விரிவுரையாளராக பங்கேற்றதுடன், அவர் சட்ட முறைமை மற்றும் நீதித் துறை நிர்வாகம்

தொடர்பான ஆசிய மன்றத்தின் மூத்த ஆலோசகராகவும், ஐக்கிய குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிப் பேரவையில் ஒன்பதாவது புகழ்பெற்ற நீதிபதியும் ஆவார்.

நீதிபதிகள் நிறுவகத்தின் ஆரம்பம் அவ்வாறாக அமைந்தது. அதிசிறந்த புத்திஜீவியாகவும், தனித்துவமான சிந்தனையாளரான கௌரவ கலாநிதி ஏ. ஆர். பீ. அமரசிங்க அவர்கள் நிறுவகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தயாராக தோள் கொடுத்து உதவ முன்வந்தமை பெரும் பெறாகும். நீதிபதிகள் நிறுவகத்தின் தோற்றம் தொடர்பாக அவரது பெயர் வலியுறுத்தப்பட வேண்டும். காரணம் அவரின் முயற்சியின் விளைவாக 1985 நவம்பர் மாதம் 20 ஆம் திகதியாக பதிவில் குறிப்பிடப்படும் 1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. 1986 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலில் வரும் வகையில் கௌரவ நீதிபதி சோசா அவர்கள் நிறுவகத்தின் பணிப்பாளராக முறையாக நியமனம் பெற்றார். அன்றிலிருந்து இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மாநாடுகள், பணிப்பட்டறைகள், பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் போன்றவற்றின் ஊடாக நீதித் துறை பதவியணியினருக்கு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சேவை ஆற்றியுள்ளது. மேலும் 1990 ஆம் ஆண்டில் நீதிபதி கௌரவ கே. விக்னராஜா அவர்கள் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும், திரு பீ. நெவில் ஏ த சில்வா பிரதம நீதியரசர் செயலகத்தில் இருந்து இளைப்பாறிச் சென்றவுடன் நிறுவகத்தின் செயலாளராகவும், இணைந்து கௌரவ நீதிபதி சோசா அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமையும் முக்கியமாக பாராட்டப்பட வேண்டியதாகும்.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளிடையே நியமிக்கப்படும் மூத்த இரு நீதிபதிகள் மற்றும் பதவி அதிகாரத்தால் கௌரவ நீதியரசர் தவிசாளராக பதவி வகிக்கும் நிர்வாக சபையினரால் நீதிபதிகள் நிறுவகம் நிருவாகிக்கப்படுகிறது. நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் நிருவாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் கௌரவ எஸ். ஷர்வானந்த இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிருவாக சபையின் முதலாவது தவிசாளர் ஆவார். அதன் பின்னர் நீதியரசர் கௌரவ பாரிந்த ரணசிங்க நிருவாக சபையின் தவிசாளர் ஆனார். அவர் நீதித் துறையின் உறுப்பினர் ஆவதுடன், நிறுவக நடவடிக்கைகளிலும் தனது நேர்மையான சிறந்த அர்ப்பணிப்புடனும் செயற்பட்டார். அவர் நிறுவகத்தின் சகல மாநாடுகளிலும், செயற்பாடுகளிலும் கலந்து கொண்டார். அவர் மாநாடுகளில் சட்டத்தரணிகளுடனும், அளவையாளர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தியதுடன், கௌரவ நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் இடையில் நல்லுறவை கட்டியெழுப்புவதற்கு மேற்பார்வைக் குழுவையும் நிறுவினார். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினுள் அவரது நினைவுகள் என்றும் நீங்கா இடம் பிடிக்கும்.

அதன் பின், முகாமைத்துவ சபையின் உறுப்பினராக அந்நாளில் கடமையாற்றிய பிரதம நீதியரசர் கௌரவ தம்பையா முகாமைத்துவ சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கும், அபிவிருத்திக்கும் மிகவும் பாராட்டத் தக்க முக்கிய பங்களிப்பை ஆற்றினார். அன்றை நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றிய திரு ஏ. எஸ். விஜேதுங்க நிறுவகத்தின் நோக்கங்களை அடைவதற்கு கடும் முயற்சி எடுத்து சிறப்பாக பணியாற்றினார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக கடமையாற்றிய காலத்தில், அவர் நிறுவகத்துக்கு ஆற்றிய பணிகள் இன்றும் புகழ்பெற்றவை. அவரின் பின் திரு லால் பீரிஸ் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய திரு வீ. எஸ். விதானாச்சியாலும் நிறுவகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கு அயராது பணியாற்றினார். நிறுவகத்தின் நலனில் ஆர்வத்தையும், அக்கறையையும் காட்டியதுடன், அவர்கள் நிறுவகத்தின் வலுவான தூண்களாக அமைவது நிச்சயம்.

இதற்கு முன்னர் திரு ஜோன் குயர் மற்றும் அதன் பின் திரு நிக் லென்க்டன் ஆகியோர் தலைமை தாங்கிய ஆசியா மன்றத்துக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது நன்றிகளை இங்கே தெரிவித்துக் கொள்கிறது. நிறுவகத்தின் தற்போதைய சிறந்த நிலைபேறான இருப்புக்கு ஆசிய மன்றம் வழங்கிய அளப்பறிய

ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவுகூருகிறது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை முதன்மையான நிறுவனமாகக் கருத வேண்டியதுடன், மன்றத்தின் அர்ப்பணிப்புக்கான அர்த்தம் இங்கு தெளிவாக வெளிப்படுவதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அதன் பின் அளுத்கடையில் அமைந்துள்ள உயர் நீதிமன்ற வளாகத்தினுள் நிறுவப்பட்டதுடன், அதன் பாராமரிப்புச் செலவினங்களை அரசு ஏற்றது. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் வழக்குகளை விசாரணை செய்யும் நீதிபதிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், நீதித் துறை சார்ந்த விடயங்களில் மேன்முறையீட்டு அதிகாரம் உள்ள நீதிமன்றங்களின் மூத்த நீதிபதிகளின் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தையும், நிருவாக விடயங்களில் நீதி அமைச்சின் மூத்த உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது. 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கலிபோனியாவில் அமைந்துள்ள சட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி போல் எம். லீ அவர்களை இலங்கைக்கு அழைத்து நீதித் துறை விடயங்கள் தொடர்பில் விரிவான கல்விப் பயிற்சி முறை ஒன்றை இரண்டு வருட கால முன்மாதிரி அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திக்கு இயன்றவாறு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் விசேட சிறப்பியல்புகள் பின்வருமாறு.

1. இலங்கை நீதித் துறையில் புதிதாக நியமிக்கப்படும் நீதித் துறை பதவியணியினரின் சட்ட அறிவையும், திறன்களையும் இற்றைப்படுத்தி, மேம்படுத்தியவாறு எதிர்காலத்திலும் தமது கல்வியை தொடர அரையாண்டு தொழிற் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தல் ;

2. மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் புதிதாக பதவி உயர்வு பெறும் நீதபதிகளுக்கு தனித் தனியாக மாதாந்தம் சேவை அடிப்படையிலான ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்களை தொடருதல்;

3. புதிய சட்ட போக்குகள், பொது மற்றும் சிறப்பு நீதித் துறை சிக்கல்களை தீர்த்தல் மற்றும் உள்நாட்டு நீதித் துறை அத்தியாயங்களையும், நடைமுறைகளையும் தரப்படுத்துவதற்கு நவீன தேவைகளுக்குப் பொருத்தமானவாறு முறையே நீதவான் நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக வருடாந்த சேவைகள் அடிப்படையிலான கல்வி மாநாடுகளை தொடர்ந்து நடத்துதல்;

4. நீதி முகாமைத்துவம், தகவல் தொடர்பு திறன், பெண்களுக்கும், சிறுபான்மை இனத்தவர்களுக்கும் நீதிமன்றத்தில் நீதியை நிறைவேற்றுதல், நீதித் துறை விடயம் சார்ந்த ஆய்வுகளில் முடிவு எடுத்தல் மற்றும் சட்டவியல், மனித நேயம், குடும்பச் சட்டம், சிறுவர் நீதிச் சட்டம், குற்றவியல் சட்டம் குடியியல் சட்டம், நன்னடத்தை மற்றும் உளநலச் சட்டம், காணிகள் மற்றும் பிரிவிடுதல் சட்டம் ஆகியவற்றுடன் மனித உரிமைகள் தொடர்பான சட்டம் போன்ற மிக முக்கியமான நீதித் துறை விடயங்களில் காலத்துக்குப் பொருத்தமாக ஒரு வார உயர் சட்டக் கல்வி நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தல்;

5. செவிப்புல மற்றும் காட்சிப்புல ரீதியாக பதிவு செய்யப்பட்ட கல்வி விடயங்கள் (நீதிமன்றங்களில், நீதிபதிகளுக்கான அடிப்படை நூலக வசதிகள்) உள்ளிட்ட நீதித் துறைக்கான விரிவான நாளாந்த வேலைக் கருவிகளை (தீர்ப்பு நூல்கள், வாய்மொழி மற்றும் எழுத்துருவிலான சோதனைப் பட்டியல், கையேடுகள் மற்றும் பிற குறிப்பு நூல்கள்) அறிமுகப்படுத்தல்;

6. நீதிபதி ஆசிரியர்களுக்காக வினைத்திறனான சட்ட பீட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல்;

7. நீதித் துறை இயக்கச் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும், நீதிமன்றங்களில் வழக்கு தாமதத்தை தவிர்ப்பதற்கும், நீதிபதிகளுக்கான நெறிமுறை நடத்தை பேணுதல் மற்றும் பொதுப் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளும் ஆராய்ச்சிகள், காணிகள் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தல்;

8. மேற் கூறப்பட்டுள்ள நீதித் துறை முறைமையை செயற்படுத்துவதற்கு பொருத்தமான வகுப்பறைகள், அலுவலகங்கள், செவிப்புல, காட்சிப்புல உபகரணங்கள் மற்றும் ஏனைய வளங்களுடன் கூடிய சட்டப் பீடத்தை திட்டமிடல், வாடகைக்கு எடுப்பதற்கான இயலுமையை கருத்திற் கொள்ளுதல் அல்லது எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்;

நீதியின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் நீதி அதிகாரத்தை வலுப்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாக அமைகிறது. ஏனெனில் நியாயமாகவும், துரிதமாகவும், வினைத்திறனான முறையிலும் நீதியை நிலைநாட்டுவதற்கு நீதித் துறை உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வகிப்பாகத்தையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு அவர்கள் சிறந்தவர்களாக இருத்தல் அவசியமாகும். இந்த இலக்கை அடைவதற்கு புதிதாக நியமனம் பெற்ற நீதிபதிகள் தங்கள் கடமையைப் பொறுப்பேற்கும் போது முறையான பயிற்சி ஒன்றை பெற்றிருப்பது அவசியமாவதுடன், அவர்கள் தாம் வகிக்கும் பதவிகளில் தத்தமது பணிக் காலம் முழுவதும் தமது கல்வியை இடைவிடாது தொடர்வது அவசியமாகும். நீதியின் தரம் நீதிபதிகள் தரத்தில் தங்கியுள்ளது. சட்டம் இருந்தால் மட்டும் போதாது. நிலைநாட்டும் நீதி அதை நிலைநாட்டும் நீதிபதிகளைப் போலவே சிறப்பாக இருத்தல் வேண்டும். சட்ட அதிகாரத்தை அர்ப்பணிப்புடன் கடைப்பிடிக்கும் அனைத்து உலக நாடுகளும் இந் நிலையை உணர்ந்து, நீதிபதிகளுக்கான பயிற்றுவிப்புக்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்திச் செல்கின்றன.

இந்த காலகட்டத்தில் உயர் நீதிமன்ற வளாகத்தில் இல 1308 ஐக் கொண்ட அறையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நிறுவப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியான கௌரவ கே. விக்னராஜா அவர்கள் நிறுவகத்தின் பிரதி பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் கௌரவ நீதிபதி ஜே. எப். ஏ. சோசா அவர்களுடன் இணைந்து நீதித் துறை பதவியணியினருக்கு சேவை ரீதியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தினார். கௌரவ கே. விக்னராஜா அவர்கள் நிறுவகத்தில் தமது பதவியில் இருந்து விலகிய உடனே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியான கௌரவ எஸ். ஜே. டீ. த எஸ். விஜேரத்ன அவர்கள் 1986 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பிரதி பணிப்பாளராக கடமையைப் பொறுப்பேற்றார். அதன் பின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதி கௌரவ பீ. எச். கே. குலதிலக அவர்கள் 2002 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தின் உறுப்பினராகவும், மேல் நீதிமன்ற நீதிபதியாகவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பணியாற்றி அவர் பெற்றிருந்த அறிவையும் அனுபவத்தையும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பெரும் சொத்தாக அமைந்ததுடன், அவர் நீதித் துறையின் பதவியணியினருக்கு ஆசானாகவும் விளங்கினார்.

பிரதம நீதியரசரான கௌரவ ஜீ. பீ. எஸ். த சில்வா அவர்கள் இளைப்பாறியதன் பின் , கௌரவ நீதியரசர் சரத் என். சில்வா அவர்கள் 2000 ஆம் ஆண்டில், பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர் கௌரவ சரத் என். சில்வா அவர்கள் நீதிபதிகள் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு பலமாக தூணாக விளங்கினார். கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தை நீதிபதிகள் நிறுவகமாக உபயோகிப்பதற்கு அனுமதியைத் தெரிவித்ததுடன், நீதித் துறை பதவியணியினருக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்திச் செல்வதற்கு நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கினார்.

உலக வங்கியின் ஒத்துழைப்புடன் நீதி, சட்ட மறுசீரமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒத்துழைப்புடன் நீதித் துறை பதவியணியினருக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில் முறையை ஆரம்பிப்பதற்கு வழிகோலினார். வினைத்திறனாக மற்றும் நிபுணத்துவத்துடன் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு நவீன நீதித் துறை அமைப்பை நிறுவுவதே இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாக அமைந்தது. வர்த்தக சட்டத்தின் மீது விசேட கவனத்தைச் செலுத்தி புதிதாக நியமனம் பெற்ற மற்றும் சேவை ரீதியான நீதிபதிகள் ஆகிய இருபகுதியினரின் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு நிதி வழங்குதல் மற்றும் தீர்ப்பளிக்கும் பயிற்சி நிகழ்ச்சிகளை மேம்படுத்தல் இத் திட்டத்தின் ஒருங்கிணைந்த அங்கமாக அமைந்தது. இந்த இலக்கை அடைவதற்கு ஒரு வருடத்துக்கு மூன்று நீதித் துறை உறுப்பினர்களுக்கு எல். எல். எம் பட்டத்தைப் பெறுவதற்கான முழு கல்விச் செலவினத்தையும், அதாவது மேலதிக வகுப்புக்கள், பிரயாணச்

செலவுகள், தங்குமிட வசதிகள் மற்றும் நியாயமான வாழ்க்கைக் கொடுப்பனவுக்கான நிதியை இத் திட்டம் வழங்கியது.

பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என். சில்வா அவர்கள் கொழும்பு 07 விஜேராம மாவத்தையில் அமைந்த அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நீதித் துறை பதவியணியினர் மற்றும் நீதிமன்ற அலுவலகர் குழாம் ஆகியோருக்கு கணனிப் பயிற்சி நிகழ்ச்சி ஒன்றை அந்நாளில் ஆரம்பித்து வைத்தார். இக் காலகட்டத்தில் நீதி அமைச்சு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணித்ததுடன், நீதிபதிகள் நிறுவகத்துக்கு இந்தக் கட்டிடத்தின் 5 ஆம் மாடியையும், 4 ஆம் மாடியின் ஒரு பகுதியை நீதிபதிகளின் தங்குமிடத்துக்காகவும் ஒதுக்கியது. பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என். சில்வா அவர்கள் நிறுவகத்துக்கு வழங்கிய அனுசரணை குறித்து நிறுவகம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் பிரதம நீதியரசர் பதவி வகித்த 2000 முதல் 2009 ஆம் ஆண்டினுள் நிறுவகத்தின் பணிகளில் நேர்மையான சேவையை ஆற்றினார். இலங்கை நீதிபதிகள் நிறுவகம் எப்போதும் அவரை கௌரவத்துடன் நினைவு கூறும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆரம்ப பணிப்பாளரான நீதிபதி கௌரவ ஜே. எப். ஏ. சோசா அவர்கள் நிறுவகத்தின் பணிப்பாளராக 21 வருடங்கள் பெறுமதிமிக்க சேவையின் வழங்கி பின், 2008 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்றார். அவர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கும், நீதித் துறை பதவியணியினருக்கும் பாராட்டத்தக்க சேவைகளை ஆற்றியதுடன், அவரது பணிகள் என்றும் எமது நினைவில் நீங்கா இடத்தைப் பிடிக்கும்.

கௌரவ நீதிபதி ஜே. எப். ஏ. சோசா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின் உயர் நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியான கௌரவ நிஷ்ஷங்க உதலாகம அவர்கள் 2008 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் 2011 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தின் பணிப்பாளராக தனது கடமைகளை ஆற்றினார். இக் காலகட்டத்தினுள் கௌரவ நீதபதி நிஷ்ஷங்க உதலாகம அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முதலாவது இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்தார். உயர் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஒத்துழைப்புடன் நீதித் துறை பதவியணியினருக்கு குற்றவியல், குடியியல், வர்த்தக விடயங்கள், வழக்கு முகாமைத்துவம் மற்றும் சச்சரவுகளைத் தீர்க்கும் மாற்று முறை போன்ற 10 இக்கு மேற்பட்ட பாடநெறி நூல்களை வெளியிட்டதுடன், கௌரவ நீதிபதி ஜே. எப். ஏ. சோசா அவர்கள், கௌரவ நீதிபதி உதலாகம அவர்கள் மற்றும் கௌரவ நீதிபதி பீ. எச். ஏ. குலதிலக அவர்கள் போன்றோர் மிகவும் பயனுள்ள பணிகளை ஆற்றினர். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்காக நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இதனை வாய்ப்பாகக் கொள்கிறோம்.

பிரதம நீதியரசர் கௌரவ சரத் என். சில்வா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்ற பின், நீதிபதி கௌரவ அஷோக டி சில்வா அவர்கள் 2009 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அவரது பதவிக் காலத்தில் நீதிபதி கௌரவ பீ. எச். ஏ. குலதிலக அவர்கள் 2009 ஆம் ஆண்டில், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் அவர் உயர் நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற கௌரவ நீதிபதி டீ. பீ. வீரசூரிய அவர்களுடன் இணை – பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கௌரவ நீதிபதி டி. பீ. வீரசூரிய அவர்களும், கௌரவ நீதிபதி கௌரவ பீ. எச். கே. குலதிலக அவர்களும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு அரும் பெரும் சேவைகளை ஆற்றியதுடன், அவர்கள் மீயுயர் நீதிமன்றத்தில் கடமையாற்றி பெற்ற விலைமதிப்பற்ற அனுபவங்களையும், சிறந்த அறிவையும் பயன்படுத்தி குடியியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதிபதிகளை பயிற்றுவிப்பதற்கு அரும் பெரும் பணிகளை ஆற்றினர். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கும் நீதிமன்றங்களிலும் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டி அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இலங்கை நீதிபதிகள் நிறுவகம் இதனை சிறந்த வாய்ப்பாக்கக் கருதுகிறது. அவர்கள் என்றும் எமது ஆசான்களாக நன்றியுடன் எமது நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

பிரதம நீதியரசர் கௌரவ அஷோக சில்வா அவர்கள் நீதித் துறை விடயங்கள் தொடர்பான கல்வி மற்றும் பயிற்சிகளில் விசேட கவனத்தைச் செலுத்தினார். பிரதம நீதியரசர் கௌரவ அஷோக த சில்வா அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் உதவியுடன் பயிற்சி நிகழ்ச்சிகளையும், பயிற்சிகளில் உள்ளடங்கங்களை மீளமைக்கவும் செயற்பட்டார். மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித் துறை அலுவலகர் போன்றோருக்கு பல பணிப் பட்டறைகளை நடத்தினார். அவர் பல

மாநாடுகளில் தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கு உதவி வழங்கினார். இக் காலகட்டத்தில் பல பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டதுடன், நீதித் துறை பயிற்சிகளை நடத்திச் செல்வதற்கு வளவாளர்களாக சம காலத்தில் பணியாற்றிய நீதிபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் போன்றோரின் சேவைகளைப் பெற்று கொள்வதற்கும் பிரதம நீதியரசர் கௌரவ அஷோக சில்வா அவர்கள் செயற்பட்டார். பயிற்சி தேவைப்படும் நீதிபதிகளுக்குப் பயிற்சி அளிக்க மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அழைப்பு விடுக்குமாறு கௌரவ பிரதம நீதியரசர் அஷோக சில்வா நிறுவகத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

இதே நேரத்தில் நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நிறுவப்பட்டது. புதிய கேட்போர் கூடம், கணனி ஆய்வகம், நூலகம் மற்றும் நீதிபதிகளுக்கான விடுதிகளுடன் கூடிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் அந்நாள் நீதி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய திரு சுகத கம்லத்துக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆகையால் நீதித் துறை பதவியணியினருக்கு புதிய நீதிபதிகள் நிறுவகத்தை வழங்குவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை நிறுவனம் எப்போதும் தனது நினைவில் கொள்ளும். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்குத் தேவையான கணனி ஆய்வகம், கேட்போர் கூடம், நூலகம் மற்றும் மரத் தளபாடங்கள் உள்ளிட்ட சகல உபகரணங்களையும் வழங்க செயற்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறது,

பிரதம நீதியரசர் கௌரவ அஷோக டி சில்வா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்ற பின், நீதிபதி ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அம்மையார் 2011 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதும், அவர் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். டீ. பீ. வீரசூரிய அவர்களும், கௌரவ நீதிபதி பீ. எச். கே. குலதிலக அவர்களும் 2012 மே மாதத்தின் போது நிறுவகத்தின் இணை பணிப்பாளர்களாக பணியாற்றினர். அதன் பின் நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த கௌரவ ருவன் பிரனாந்து அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், நீதவானாகக் கடமையாற்றிய மஹீ விஜேவீர நிறுவனத்தின் கல்வி இணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பிரதம நீதியரசர் கௌரவ ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அம்மையார் தலைமை வகித்த முகாமைத்துவச் சபை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியது. இதன் போது நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவின் கணக்காளர் பதில் கடமை அடிப்படையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கணக்காளராக நியமிக்கப்பட்டார். அத்துடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளையும், கடமைகளையும் வினைத்திறனாக ஆற்றுவதற்கு நீதித் துறை பதிவாளர் மற்றும் மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அந்நாளில் நீதி அமைச்சில் கடமையாற்றிய கனிஷ்ட அலுவலகர் இருவரை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த அந்நாள் நீதி அமைச்சின் செயலாளர் பதவியை வகித்த திரு சுகத கம்லத்துக்கு இங்கே நிறுவனத்தின் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். 2012 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஒருங்கிணைந்த திட்டமும், செயற்பாட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டதுடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தால் நிதி ஒழுங்குவிதிகளுக்கு கீழ் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான அதிகாரத்தை வெளிக்காட்டுவதற்கான அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தால் தமது ஆண்டறிக்கை பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டது. அதேபோலவே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஊழியர் எண்ணிக்கையும் தயாரிக்கப்பட்டதுடன், நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சிகள், தொழிலாளர் நியாய சபைகளின் தவிசாளர்கள் வரை விரிவுபடுத்தப்பட்டன. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நவீன பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஆய்வு வசதிகளுடன் கூடிய நிறுவகமாக மாற்றமடைவதற்கு இக் காலகட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சிகளும், மீளமைப்பு செய்வதும் ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வசதிகளும் நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இக் காலகட்டத்தில் நிறுவகத்தின் செயலகத்தை தாபிப்பதற்கு பொருத்தமான இடத்தை தேடிப் பிடித்தல், பயிற்சி நிகழ்ச்சிகளை விரிவுபடுத்தல், *Wi-Fi* வசதிகளுக்காக நன்கு வடிவமைக்கப்பட்ட கணனி ஆய்வகத்தில் இணைய நூலகம் ஒன்றைத் தாபிப்பதற்கு நூலக வசதிகளை மேம்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) உதவியுடன் இணையத் தளத்தை மீள செயற்படுத்தல், மீயுயர் நீதிமன்றங்களில் அறிக்கையிடப்படாத வழக்குத் தீர்ப்புக்களை சேகரித்தல், நீதிபதிகளுக்கு நிறுவகத்தினுள் விடுதி வசதிகளை வழங்குதல், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நீதித் துறை பதவியணியினருக்கு பயிற்சி கையேடுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல், தேவையான அலுவலகர் குழுவை ஆட்சேர்ப்பு செய்தல், கணனி செர்வர் போன்ற முக்கியமான பௌதீக வளங்களை விநியோகித்தல், கணனி அச்சு பிரதிகள் மற்றும் நிழற் பிரதிகள் போன்ற வசதிகளை ஆரம்பித்தல், அரச நிருவாக மற்றும் நிதி சுற்றறிக்கைகளின் பரிந்துரைகளுக்கு அமைய நிருவாக விடயங்களில் இணைந்து செயற்படுவதற்கு முழுமன்னுரிமை அளிக்கப்பட்டது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் இது தொடர்பில் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களிடம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இது தொடர்பாக ஆற்றிய சேவைகளுக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கல்வி இணைப்பாளர் திரு மஹி விஜேவீரவுக்கும், நிறுவகத்தின் பதிவாளராகக் கடமையாற்றிய திரு ஞானபால உள்ளிட்ட நிறுவகத்தின் அனைத்து அலுவலகர்களுக்கும் தமது உண்மையான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

2013 ஜனவரி மாதத்தில் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் இலங்கை பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதை அடுத்து, அவர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கு தனது உண்மையான அர்ப்பணிப்பையும், பங்களிப்பையும் வெளிப்படுத்தி, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு அயராது சேவையாற்றிய பலமிக்க தூணாக விளங்கினார். 2013 ஏப்பிரல் மாதம் நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தில் புதிய பகுதி ஒன்றில் நிறுவக அலுவலகத்தை நடத்திச் செல்வதற்கான வாய்ப்பு வழங்கியதையிட்டு, அதற்காக பங்களிப்பு நல்கிய பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தின் ஒரு பகுதியை வழங்குவதற்கு அந்நாளில் நீதி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய திருமதி கமலினி டி சில்வாவுக்கு நிறுவனம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. பிரமத நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலகர் எண்ணிக்கையை 09 முதல் 23 வரை அதிகரித்ததுடன், நீதிபதிகளுடன் தமது அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கு பல்வேறு துறைகளில் நிபுணத்துவத்தை பெற்றிருந்த வல்லுனர்களையும், தொழில் ரீதியாக தகைமை பெற்றிருந்த நீதித் துறையின் வல்லுனர், அறிஞர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நீதிபதிகளுடன் உரையாற்றுவதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் நீதித் துறையில் நிபுணர்கள் ஆகியோருக்கு தவறாது அழைப்பு விடுப்பதற்கு பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் மறக்கவில்லை. அதனூடாக அவர்களின் அறிவும், அனுபவமும் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அளித்தார். இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட பல மாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பல தரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டதுடன், அவரின் அறிவையும், அனுபவத்தையும் நீதிபதிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில் ஆதாரச் சட்டம் மற்றும் குடியியல் சட்டம் ஆகியவற்றின் மறுசீரமைப்புத் தொடர்பில் தீர்ப்புக் கையேட்டை இற்றைப்படுத்துவதற்கு இரு குழுக்களை நியமித்தார். தற்போது கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் புகழ்பெற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள வெளிநாட்டு நீதிபதிகளின் உதவியுடன் வழக்கு முகாமைத்துவ துறையில் குடியியல் நீதி அமைப்புத் தொடர்பான சட்ட மறுசீரமைப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். குடியியல் நீதி அமைப்புக்குத் தேவையான சட்ட மறுசீரமைப்பை கொண்டு வருவது தொடர்பில் பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் காட்டிய முயற்சிக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் பதவியேற்ற பின் குறிப்பாக வழக்கு முகாமைத்துவம், நீதித் துறை முகாமைத்துவம், நீதித் துறையின் நெறிமுறைகள் ஆகியவை தொடர்பில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகளுக்கு மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வெளிநாட்டு பயிற்சிகளை வழங்கியுள்ளார். இக் காலகட்டத்தில் நிறுவகத்தின் கல்வி இணைப்பாளராக திரு லக்மால் விக்கிரமசூரியவின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவர் நீதிபதிகளுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை தேடித் தருவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்தார். ஆகையால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்காக வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்யும் போதும், ஒருங்கிணைக்கும் போதும் அவர் காட்டிய அர்ப்பணிப்பும், சேவைக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அவருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கான வாய்ப்பாக்கிக் கொள்கிறது. பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் தனது பதவிக் காலத்தினுள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு துரிதமான வளர்ச்சி கிட்டியதை பெருமையுடன் நினைவு கூருதல் வேண்டும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு வளவாளராகவும், நிறுவகத்தின் ஏனைய பணிகளில் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் மீயுயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கும், மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும், கல்விசார் சமூகத்துக்கும், பல தரப்பட்ட தொழில்வாண்மையாளர்களுக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது. அத்தடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிப்பதில் முக்கிய வகிப்பாகத்தில் அரும் பெரும் பணியாற்றிய நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் திரு சிசிர ரத்னாயக்கவை இங்கு முக்கியமாக நன்றிபூர்வமாக குறிப்பிடுதல் வேண்டும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தற்போது சர்வதேச நீதித் துறை பயிற்சி நிறுவனத்தின் (IOJT) உறுப்பினராக செயற்படுகின்றது. நீதித் துறை அலுவலகர்களுக்கு நீதி மற்றும் சட்டத் தகவல்களை பிரபலப்படுத்தும் அரம்பயா இணையத் தளத்திலும், மின்.நூலகமும் இன்று இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்குச் சொத்தமாக உள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம், தங்காலை ஆகிய மேல் நீதிமன்றங்களையும், பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ மாளிகையும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துடன் தொடர்புபடுத்தும் காணொளி மாநாட்டு (video conferencing facility) வசதிகளையும், இலங்கை நீதிபதிகள் நிறுவகம் கொண்டுள்ளது. முதலாவது சர்வதேச தரவுகள் தளமான "மனுபத்திர" (Manupatra) எனும் பெயரில் இந்தியாவின் இணையத் தளத்தையும் நிறுவகம் கொள்வனவு செய்துள்ளதுடன், இந்த இணையத் தளத்தின் காரணமாக இந்திய உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், அமெரிக்க ஐக்கிய குடியரசின் உச்ச நீதிமன்றம் ஆகியவை வழங்கிய வழக்குத் தீர்ப்புக்களையும், சகல மந்திரிகளின் வழக்குத் தீர்ப்புக்களுக்கு பிரவேசிப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது. இலங்கை நீதித் துறை பதவியணியினரைப் பயிற்றுவிக்கும் போதும், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு இலத்திரனியல் பயிற்றுவிப்புச் சாதனங்கள் உள்ளிட்ட பயிற்சி கையேடுகளை வழங்குவது தொடர்பில் அமெரிக்க ஐக்கிய குடியரசு / பெடரல் நீதி மையம், மலேசியாவின் நீதிபதிகள் நிறுவகம், சிங்கப்பூர் நீதிபதிகள் நிறுவகம் மற்றும் இந்திய நீதிபதிகள் நிறுவகம் போன்றவை வழங்கிய உதவிகளை நிறுவகம் பதிவு செய்துள்ளது.

2015 ஜனவரி மாதம் கௌரவ நீதிபதி கே. ஸ்ரீபவன் அவர்கள் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதுடன், அதன் விளைவாக, அவர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

தொடர்ச்சியான நீதித் துறைப் பயிற்சிகளின் ஊடாக நீதிபதிகளின் தொழில் தரத்தை உயர்த்துவதற்கு பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் கவனம் செலுத்தியதுடன், நீதிபதிகளுக்கு குடியியல் சட்டப் பிரிவில் பயிற்சிகளை நடத்துவதற்கு கௌரவ நீதிபதி டீ. பீ. வீரசூரியவை ஆலோசகராக நியமித்தார். இதைத் தவிர, மேல் நீதிமன்ற நீதிபதிகள், நீதித் துறை அலுவலகர் மற்றும் தொழில் நியாய சபையின் தவிசாளர்கள் ஆகியோருக்கு அத்தியாவசிய பயிற்சிகளை வழங்குவதற்கு கௌரவ நீதிபதி பீ. எச். கே. குலதிலக அவர்கள், கௌரவ நீதிபதி சலீம் மார்சூக் அவர்கள், கௌரவ நீதிபதி பீ. ஏ. ரத்னாயக்க அவர்கள், கௌரவ நீதிபதி சுரேஷ் சந்திர அவர்கள் மற்றும் கௌரவ நீதிபதி ஏ. டபிள்யூ. ஏ. சலாம் அவர்கள் போன்ற இளைப்பாறிய நீதிபதிகளுக்கு தயக்கமின்றி அழைப்பு விடுத்தார்.

பல்கலைக்கழக அறிஞர்கள், மருத்துவ வல்லுனர்கள், தொழிநுட்ப நிபுணர்கள், தடயவியல் விஞ்ஞானிகள், அறிவுசார் சொத்துச் சட்டம் தொடர்பான வல்லுனர்கள், வர்த்தக மற்றும் நிதித் துறை தொடர்பான வல்லுனர்கள் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளவாளர்களின் அறிவையும், அனுபவத்தையும் நீதிபதிகளுடன் பரிமாற்றிக் கொள்ளுவதற்கு கௌரவ பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அந்த அறிஞர்களுக்கு அழைப்பு விடுத்தது. இங்கு NATA சட்ட அமுலாக்கத்துக்கு அமைய ஐக்கிய குடியரசின் அரச திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் காசோலை மற்றும் பரிவர்த்தனைகள் அமைப்பின் கீழ் கொள்ளப்படும் வங்கிகள், கணனிக் குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பம் போன்ற விடயங்கள் உட்சேர்க்கப்பட்டது. மேலும் தொழில் நியாய சபைகளின் தவிசாளர்களை இலக்கு வைத்து தூதர் வரப்பிரசாத சட்டம் மற்றும் அரச உரிமை தொடர்பில் பணிப்பட்டறை ஒன்றும் நடத்தப்பட்டது. கௌரவ பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் அவர்கள் இவ்வாறான பல பணிப்பட்டறைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டு அங்கு சிறப்புரை ஆற்றினார்.

நீதிபதிகளின் கையேடுகளை இற்றைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய கௌரவ நீதிபதியின் தலைமையில் ஒரு குழுவும், சாட்சி தொடர்பிலான தீர்ப்பாசனக் கையேட்டை இற்றைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றத்தின் நீதிபதி பதவியை வகிக்கும் கௌரவ நீதிபதி ஒருவரின் தலைமையில் ஒரு குழுவும், கௌரவ பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை நியமித்தது. இக் கால கட்டத்திலேயே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு செயலாளர், நூலக அதிபர், வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழிநுட்பவியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் சிலரும், விடுதிக் காப்பாளர், சாரதி ஒருவரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

அத்துடன் நீதித் துறை நிருவாகம் மற்றும் கணக்கியல் நடைமுறைகள் தொடர்பில் சட்ட பதிவாளர்களுக்கு பயிற்சி ஒன்றை வழங்குவதற்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நடவடிக்கை எடுத்தது. இதன் போது 143 சட்டப் பதிவாளர்களுக்கு ":நீதித் துறை நிருவாகம், தாபனக் கோவை மற்றும் நீதித் துறையின் கணக்கியல் நடைமுறைகள்" தொடர்பான 3 செயலமர்வுகள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்டது. மேலும், இதன் போது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பில் 53 காத்தி நீதிபதிகளுக்கான செயலமர்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த மனுபத்திர சட்ட தரவுத் தளத்தைத் (Manupatra Legal Database) தவிர, நிறுவகத்தின் நூலகத்துக்கு வெஸ்ட்லோ சட்டத் தரவுத் தளம் (Westlaw Legal Database) ஒன்றையும் விலை கொடுத்து வாங்கியது. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் கௌரவ உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் சகல நீதிபதிகளுக்கும், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கும் தனிப்பட்ட கடவுச் சொற்களை வழங்கியது. கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஊடாக விடுத்த வேண்டுகோளை அடுத்து இரண்டு வார காலத்தினுள் ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கும் இந்த வசதி வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டம் மற்றும் லங்கா பெல் சொலியுஷன்ஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நீதிபதிகளின் நலனுக்காக ஆராய்ச்சி மற்றும் பல இணைப்பு வசதிகளுடன் கூடிய நீதிபதிகள் சட்ட தரவுத் தளம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் அனுமதி வழங்கப்பட்டது. இந்தச் சட்ட தரவுத் தளத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கும், ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டத்தின் ஒப்பந்தக்காரருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நீதி அமைச்சு, இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டம் ஆகியவை இணைந்து செயற்படுத்தப்படும் செயற்திட்டமாகும். ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டத்தினால் ஆலோசகர்களாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய கௌரவ நீதிபதி, சட்டத்தரணிகள் மற்றும் சட்ட மாணவர்கள் ஏற்கனவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். இலங்கை சட்ட அறிக்கைகள், புதிய சட்ட அறிக்கைகள், சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட அறிக்கைகள் மற்றும் ஸ்ரீஸ்காந்த சட்ட அறிக்கைகள் போன்றவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்புக்களை குறிப்பிடுவதற்கு இலங்கை

நீதிபதிகள் நிறுவகம் நீதி அமைச்சின், சட்டத்தரணிகள் சங்கத்தின் மற்றும் ஸ்ரீகாந்த சட்ட அறிக்கைகள் போன்றவற்றின் பதிப்புரிமையைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் 151 நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபையின் 30 தவிசாளர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தமை இக் காலத்தினுள் எட்டிய விசேட சாதனைகளில் ஒன்றாகும். இந்த வெளிநாட்டுப் பயிற்சிகள் புதுடில்லி சட்டக் கல்லூரி, இந்தியாவின் போபால் நகரில் அமைந்துள்ள தேசிய சட்டக் கல்லூரி மற்றும் மலேசியாவில் அமைந்துள்ள நீதி மற்றும் சட்டப் பயிற்சி நிறுவகம் ஆகியவற்றால் நடத்தப்பட்டன.

இக் காலகட்டத்தினுள் உயர் நீதிமன்றங்களில் கடமையாற்றும் அனைத்து நீதிபதிகள், நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய சகல நீதிபதிகள், மற்றும் தொழில் நியாய சபைகளின் தவிசாளர்கள் ஆகியோருக்கு 294 மடிக் கணனிகளை பகிர்ந்தளித்தமை கௌரவ பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அடைந்த மற்றுமொரு சாதனையாகும்.இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கத்தில் இருந்து நீதி அமைச்சின் ஒத்துழைப்புடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் கணனிகளை கொள்வனவு செய்தது.

2017 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் "SLJI NET"- “இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிகழ்நிலை சட்ட தகவல்கள் வலையமைப்பை” நிறுவியது. அது சட்ட ரீதியான தகவல்கள் தொடர்பான முதலாவது நீதிபதிகளின் நிகழ்நிலை தரவுத் தளமாக அமைகிறது. "SLJI NET" ஊடாக முக்கியமான வழக்கு சட்டம் மற்றும் சட்ட ரீதியான தகவல்கள் போன்றவற்றை பெறுவதற்கான அணுகலை இலங்கை நீதிபதிகளுக்கு வழங்குகிறது. "SLJI NET" உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மற்றும் இலங்கை மேல் நீதிமன்றங்கள் போன்றவற்றின் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் பதிவு செய்யப்படாத வழக்குத் தீர்ப்புக்கள், சட்டம், வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்கள், அறிக்கைகள் மற்றும் கட்டுரைச் செய்திகள் போன்ற விடயங்கள் சார்ந்த அணுகலை வழங்குவதற்கு நீதிபதிகளுக்கு பயனர் நேயமுள்ள தரவுக் களஞ்சியத்தின் உதவிச் சாதனமாக அமைப்பதற்கு கருதப்படுகிறது. அது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஒன்றிணைந்த சட்ட ரீதியான தரவுத் தளத்தை அணுகுவதற்காக நிர்மாணிக்கப்பட்டது.

கௌரவ எம். ஆர். சீ. பிரனாந்து அவர்களின் இராஜினாமாவின் பின்னர், 2017 ஆம் ஆண்டில் கௌரவ நீதிபதி ஈ. ஏ. பீ. ஆர். அமரசேகர அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

2018 ஆம் ஆண்டின் முதல் பாதியில், கௌரவ நீதிபதி ஜானக டி சில்வா இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கௌரவ நீதிபதி ஈ. ஏ. ஜீ. ஆர். அமரசேகர இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்த பின், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் கௌரவ நீதிபதி ஜானக டி சில்வா இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இதன் பின் மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ எம். பீ. டீ. சில்வா இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவியில் நியமிக்கப்பட்டார். அந்த ஆண்டிலேயே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கல்வி இணைப்பாளராக திரு டீ. எம். ஏ. செனெவிரத்ன நியமிக்கப்பட்டார்.

2019 ஆம் ஆண்டில் கௌரவ நீதிபதி ஜானக டி சில்வா அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ததை அடுத்து, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் கௌரவ நீதிபதி எல். டீ. பீ. தெஹிதெணிய அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2020 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையினால் கௌரவ பிரான்ஸ் குணவர்த்தன அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

கௌரவ எல்.டீ.பீ. தெகிதெணிய அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததை அடுத்து, 2021 ஆம் ஆண்டில், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை கௌரவ பிரான்ஸ் குணவர்த்தன அவர்களை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பதில் கடமையாற்றும் பணிப்பாளராக நியமித்தது.

2022 ஆம் ஆண்டில் கௌரவ பிரான்ஸ் குணவர்த்தன அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அந்த ஆண்டிலேயே, கௌரவ நீதிபதி மகிந்த சமயவர்த்தன அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பதவியில் நியமிக்கப்பட்டதுடன், கௌரவ லக்மால் வீரசூரிய அவர்கள் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் பதவியில் நியமிக்கப்பட்டார்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபைக்கும், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் அதன் பணிக் குழுவுக்கும், நீதித் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களுக்கும், ஐக்கிய நாடுகளின் ஆதார சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டத்துக்கும் (USAID CORE Justice), ஐரோப்பிய ஒன்றியத்துக்கும், வர்த்தக சட்ட மேம்பாட்டு நிகழ்ச்சிக்கும் *(CLDP)*, ஐக்கிய குடியரசின் காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை அலுவலகத்துக்கும் (USPTO), ஐக்கிய நாடுகளின் உணவுத் திட்டத்துக்கும் (FAO), சர்வதேச அமைதி மற்றும் சட்ட ஆட்சிக்கான மெக்ஸ் ப்லென்க் அறக்கட்டளை, சட்டத்தின் ஆட்சிக்கு வழிசமைத்தல் தொடர்பான அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கத்துக்கும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்துக்கும் (USAID), சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் (ICRC), நிதி வழங்கிய பிற நிறுவனங்களுக்கும் மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிக் குழுவுக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(History from 1985-1991 (Courtesy Judges' Journal Vol. 1)

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவமும், பணிக் குழுவும்

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நிலையான இருப்பு மற்றும் பொது முத்திரையுடன் கூடிய கூட்டுத்தாபனமாவதுடன், அதன் நிருவாகமும் முகாமைத்துவமும் முகாமைத்தவ சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பிரதம நீதியரசர் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இரு உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டதுடன், பிரதம நீதியரசர் முகாமைத்துவச் சபையின் தவிசாளராவார். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் மீள் கட்டமைப்பின் பின், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிறுவன கட்டமைப்பு பின்வருமாறு காட்டப்படும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை

2022 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் கட்டமைப்பு கீழே காட்டப்படுகிறது.

இலங்கையின் பிரதம நீதியரசரான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய அவர்கள் (தவிசாளர்) மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி ஜனாதிபதி சட்டத்தரணி கௌரவ புவெனக அலுவிகாரே அவர்கள் (உறுப்பினர்) மற்றும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி கௌரவ எல். டீ. பீ. தெஹிதெணிய அவர்கள் (உறுப்பினர்) ஆவர்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிக் குழு

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்ற தேவையான வகையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர், உத்தியோகத்தர் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்படுவதுடன், பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் (சேவையில் இருந்து அகற்றும் அதிகாரம் உள்ளிட்ட) செலுத்துபவர் ஆவார். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர், உத்தியோகத்தர் மற்றும் பணியாளர் ஆகியோரது சம்பளங்கள், படிகள் மற்றும் சேவை நிபந்தனைகள் போன்றவற்றை தீர்மானிக்கும் அதிகாரமும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

01.	பணிப்பாளர்	கௌரவ நீதிபதி மகிந்த சமயவர்த்தன அவர்கள்
02.	ஆலோசகர்	கௌரவ நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தன அவர்கள்
03.	பிரதி பணிப்பாளர்	கௌரவ லக்மால் வீரசூரிய அவர்கள்
04.	கல்வி இணைப்பாளர்	திரு டீ. எம். ஏ. செனெவிரத்ன

05.	செயலாளர்	திருமதி எச். எம். குமுதுணி மதுவந்தி
06.	கணக்காளர்	திருமதி யூ. வீ. ரத்மிணி ராஜகருணா
07.	ஆய்வு உத்தியோகத்தர்	செல்வி டபிள்யூ. எம். எம். கருணாரத்ன
08.	நீதிச் சேவைகள் முகாமைத்துவ உதவியாளர் **(நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் இணைப்பு செய்யப்பட்டார்)**	திரு எஸ். எம். ஏ. ருவன் சாமசுந்தர
09.	முகாமைத்துவ உதவியாளர்கள்	திருமதி வீ. கே. ரணவீர
		செல்வி வீ. ஏ. எஸ். லக்மாலி
		செல்வி டீ. பீ. என். த சில்வா
		திருமதி ஆர். எம். எம். எரந்திகா
10.	வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழிநுட்பவியலாளர்	திரு ஏ. டீ. கயான் குணதிலக
11.	புத்தகம் கட்டுபவர் **(நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் இணைப்பு செய்யப்பட்டார்)**	திரு டபிள்யூ. ஜீ. ஏ. டீ. வீரசிங்க
12.	அலுவலகப் பணி உதவியாளர்	செல்வி மேனகா பத்மசீலி
		செல்வி நதீஷா சதுரங்கனி
13.	அலுவலகப் பணி உதவியாளர் (பல்பணி அபிவிருத்தி செயலணியில் இருந்து இணைப்பு செய்யப்பட்டனர்)	திருமதி எல். சமரி தனுஷிகா
		திருமதி ஆர். எம். மகேஷா சுதர்ஷனி
		திருமதி வை. இசுரி காவிந்தி
14.	சாரதி	திரு ஜீ. டப்ளியூ. ரஞ்சித்
		திரு. பீ. ஏ. நிஷாந்த (பல்பணி அபிவிருத்தி செயலணியில் இருந்து இணைப்பு செய்யப்பட்டார்)
15.	விடுதிக் காப்பாளர்	திரு எச். கே. டீ. எம். செனெவிரத்ன

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியம

நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் நிருவாகிக்கப்படும், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கே சொந்தமான நிதிகள் உள்ளன. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் மூலதனம் மற்றும் மீண்டு வரும் செலவினங்களை ஈடு செய்வதற்கு நிறுவகத்துக்கு நிதி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி நீதி அமைச்சின் ஊடாக பாயும் பொது திறைசேரி ஏற்பாடுகளில் இருந்து மானியமாக கிடைக்கப்படுகின்றது. இந்தச் செலவினங்களுக்கு நீதி அமைச்சு ∴ பொது திறைசேரி அதிக பட்ச செலவினங்களை வரம்புகளை விதிப்பதுடன், இந்த வரம்பினுள் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் செயற்பட நேர்ந்துள்ளது.

1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஜனாதிபதியினால் ஊகிக்கப்படும் குறித்த ஏதேனும் மூலாதாரங்களில் இருந்து கிடைக்கும் நன்கொடைகள், பரிசுகள், மற்றும் அன்பளிப்புக்கள் போன்றவற்றை பாரமேற்பதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு அதிகாரம் இருப்பதுடன், அவ்வாறான குறித்த ஏதேனும் மூலாதாரங்களில் இருந்து நிறுவகத்துக்குக் கிடைக்கும் நன்கொடைகள், பரிசுகள் மற்றும் அன்பளிப்புக்கள் நிறுவகத்தின் நிதியத்துக்கு செலுத்துதல் வேண்டும். நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் போன்றவற்றுக்கு ஏற்கும் அனைத்து செலவினமும் (சம்பளங்கள் உட்பட) நிறுவகத்தின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டு ஈடு செய்தல் வேண்டும்.

பொது திறைசேரி நீதி அமைச்சின் ஊடாக 2022 ஆம் ஆண்டுக்காக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் மூலதனச் செலவினங்களாக 1.32 மில்லியன் ரூபாயையும், மீண்டு வரும் செலவினங்களாக 14.84 மில்லியன் ரூபாயையும் வழங்கியது.

பயிற்சித் திட்டங்கள்

1985 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நிறுவகத்தினுள் பல பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. ஆயினும், 2013 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் விரிவாக்கத்துடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் மேற் கொள்ளப்படும் நிகழ்ச்சிகளின் ஊடாக மேல் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாய சபை தவிசாளர்கள், காதி நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோருக்கும் சேவைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் மேற் குறிப்பிடப்படும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சட்டக் கல்வி, திறன் விருத்தி உள்ளிட்ட ஆற்றல்களை வலுப்படுத்தல், உளப்பாங்கு மாற்றம் மற்றும் சமூக அர்ப்பணிப்பு போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக நீதித்துறையின் செயலாற்றுகையில் உயர்ந்த தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. மேலும், கல்வி மற்றும் ஆராய்ச்சி ஊடாக மேம்படுத்தப்பட்ட நீதித் துறை நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தை மேலும் அபிவிருத்தி செய்து நிறுவுவதற்கு, நீதிபதிகளின் நிறுவகம் அர்ப்பணிப்புடன் தனது சேவைகளை ஆற்றி வருகிறது. நீதித் துறை சேவை விடயப் பரப்பினுள் உள்ள ஆரம்ப சட்ட அதிகாரத்தைக் கொண்ட நீதிமன்றங்களில் நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தவிசாளர்கள் போன்றோரின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நீதிபதிகளின் நிறுவகம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பயிற்சித் திட்டங்களில் கலந்து கொள்ளும் சகல நீதிபதிகளுக்கும் ஏற்புடையதாக பொதுவான பயிற்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதிலும், பயிற்சி கையேடுகள் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்பவரின் தன்மையைப் பொறுத்து பயிற்சித் தேவைகளும் வேறுபடும். பயிற்சியின் தன்மை மற்றும் நீதித் துறை பதவியணியினரின் அனுபவம் அல்லது அவரினால் பயிற்சி அமர்வுகளில் ஆரம்பத்தில் அவர் பெற்ற அறிவைப் பொறுத்து ஒரு பயிற்சித் திட்டம் கட்டாயமாகவோ, தன்னார்வமாகவோ அல்லது விருப்புக்குரியதாகவோ அமையும். உரிய பயிற்சித் திட்டங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் யாருக்கு உண்டு என்பதையும், பயிற்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது எவ்வாறு எனும் விடயங்களும், பயிற்சியின் இலக்குக் குழுவினர் மற்றும் பயிற்சிக்கான காலம் போன்ற சிக்கல்கள், பயிற்சித் திட்டத்துடன் உள்ளடக்கப்படும்.

இலங்கையினுய் நீதித் துறை பதவியணியினரின் தொழில் வாழ்க்கை முழுவதும் அவர்களது தொழில் ரீதியான நிபுணத்துவத்தை உயர்த்துவதையும், அவர்களின் அறிவு விருத்தியையும் இலக்காகக் கொண்டு கட்டாய சேவை ரீதியான பயிற்சித் திட்டத்துக்கு கலந்து கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்படும். அதற்கமைய இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நிறுவனத்தினுள் ஒவ்வொரு சனிக் கிழமைகளிலும், நடத்தும் சேவை ரீதியான பயிற்சித் திட்டங்களுக்கு கலந்து கொள்ளுமாறு நீதித் துறை பதவியணியினருக்கு பணிப்புரை விடுக்கப்படுவதுடன், கலந்து கொள்ள தவறும் சந்தர்ப்பத்தின் அவ்வாறான சேவைப் பயிற்சித் திட்டங்களுக்கு கலந்து கொள்ள முடியாமைக்கான காரணத்தையும் உரிய அதிகார அணியினருக்கு அறிவிக்கவும் பணிப்புரை விடுக்கப்படுகிறது.

புதிதாக நியமனம் பெற்று பயிற்சி பெறும் நீதித் துறை பதவியணியினரை இலக்காகக் கொண்டு தினசரி அடிப்படையில் அறிமுகப்படுத்தல் மற்றும் ஆரம்ப பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுவதுடன், அந்தப் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றல் கட்டாயமாகும். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் நடத்தப்படும் பயிற்சி அமர்வுகளுக்கு நீதித் துறை பதவியணியினருக்கு பங்கேற்காது இருத்தல் ஆகாது. மேலும் சேவையில் ஈடுபட்டுள்ள நீதித் துறை பதவியணியினர் மேலதிகப் பயிற்சிக்காக நீதிபதிகள் நிறுவகத்துக்கு இணைப்பு செய்வதற்கு நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டால், மற்றைய பயிற்சித் தேவைகளும் எழும்.

பயிற்சியின் தன்மை

1. கட்டாயப் பயிற்சி

மேற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையில் ஈடுபட்டுள்ள மற்றும் பயிற்சி பெறும் நீதித் துறை அலுவலகர்களுக்கான தொடர்ச்சியான கட்டாயப் பயிற்சிகள் இடைவிடாது மேற் கொள்ளப்படுவதுடன், விருப்பத்துக்குரிய மற்றும் தன்னார்வ பயிற்சித் திட்டங்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நீதித் துறை பதவியணியினருக்காக மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், நீதித் துறை பதவியணியினரின் தேவைகளைக் கருத்திற் கொண்டும், தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டும் நேருக்கு – நேரான தொலைதூரக் கற்றல், தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தன்னார்வ கற்றல், நீதித் துறை பயிற்சியும் தற்காலத்தில் பிரபலமானவை. பிற நீதிமன்ற நியாயாதிக்கத்தினுள் நேரும் மாற்றங்களை கருத்திற் கொண்ட நீதித் துறை பயிற்சிகளுக்கான புதிய அணுகல் அறிமுகப்படுத்தப்பட்டது.

2. விருப்பத்துக்குரிய பயிற்சி

நீதித் துறை பதவியணியினரின் தரத்தையும், தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு நீதித் துறை நடவடிக்கைகளில் ஆங்கில மொழியை எழுதுதல், ஆளுமை விருத்தி, கணனிப் பயிற்சி, சுகாதார மேம்பாடு போன்ற இதர நீதிமன்ற நியாயாதிக்க எல்லையுடன் தொடர்பான உதவிப் பாடநெறிகள் விருப்பத்துக்குரிய பாடநெறிகளாக கருதப்படும். அத்துடன் சேவை ரீதியான நீதித் துறை பதவியணியினருக்கு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற உதவிப் பாடநெறிகளும் விருப்பத்துக்குரிய நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

3. பயிற்சிக் காலம்

சிறந்த முறையில் நிறுவப்பட்டுள்ள தன்னார்வ விருத்தி அல்லது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கல்விசார் கல்வி நிறுவனங்களில் இருந்து கணிசமான நிதிபதிகள் உருவாகும் நாடுகளைப் போல அல்லாது, இலங்கையை பொறுத்தவரையில் தனியார் துறையில் சட்டத் தொழிலுக்கு அல்லது அரச சட்டத் தொழில் சட்டத்தரணியாக ஆரம்ப கட்டாய சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணிகள் நீதித் துறை பதவியணியினராக நியமிக்கப்படுகின்றனர். மதிப்பீட்டு முறைமையின் பின்னர் ஆரம்ப பயிற்சிக் காலத்தை நீடிப்பு செய்யும் குடியியல் சட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லையினுள் ஒப்பிடும் போது, நீதித் துறை பயிற்சி பொதுவாக ஆறு மாதங்களுக்கு வரையறுக்கப்படுகிறது. கட்டாய முன்னிலைப்படுத்தல், ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் ஒப்படைகளை சமர்ப்பிப்பதுடன் உரிய பயிற்சி ஒரு வருட காலத்தால் நீடிப்பு செய்யப்பட வேண்டும் என்பதே இந்தக் கற்றல் மொடியுல்ஸ் மூலமாகத் திட்டமிடப்படுகிறது.

4. பயிற்றுவிப்பாளர்கள்

தற்போது, நீதித் துறை பதவியணியினருக்கான பயிற்சிகளை இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மேற் கொள்கிறது. ஆயினும், நீதித் துறை பதவியணியினருக்கு ஏற்புடைய மற்றும் உபயோகமுள்ள நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்துவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையும் அதற்குரிய அரச முகவர் நிறுவனங்களும், பல்கலைக்கழக நிறுவனங்களும் அதற்கான அனுமதியை வழங்கும். நீதித் துறை பதவியணியினருக்கான வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களை ஆரம்பிக்கும் போது, அவ்வாறான பயிற்சி அமர்வுகள், வெளிநாட்டு பல்கலைக்கழகம், சட்டக் கல்வி நிறுவகம் அல்லது அது தொடர்பில் நிபுணத்துவத்தைப் பெற்றுள்ள நிறுவனத்தால் நடத்தப்படும்.

5. நீதித் துறை பயிற்றுவிப்பாளர்கள்

தற்போது, நீதித் துறை பதவியணியினருக்கான பயிற்சிகள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் வழங்கப்படுகின்றன. அத்துடன் அரச சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த சட்ட அலுவலகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட குறித்த பயிற்சித் திட்டங்களை நடத்துகின்றனர். அத்துடன், அறிவு, அனுபவம் மற்றும் நீதித் துறை அலுவலகர் தொடர்பில் பெற்றுள்ள நிபுணத்துவம் ஆகியவற்றை அடிப்படைக் காரணிகளாகக் கருத்திற் கொண்ட நீதித் துறை பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு பிரபல சட்டமானிகளுக்கும், அறிஞர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது. பயிற்சியைப் பெறும் நீதித் துறை பதவியணியினரின் கல்விப் பாடநெறிகள் தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது, அந்தப் பயிற்சிப் பாடநெறிகள் இளைப்பாறிய மற்றும் தற்போது கடமையாற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் போன்றோராலும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் இளைப்பாறிய மூத்த நீதித் துறை பதவியணியினராலும் நடத்தப்படுகின்றன. மேலும் அடையாள அணிவகுப்புக்கள், மரண விசாரணை மற்றும் களப்

பரிசோதனை என்பவற்றுடன், வாக்குமூலத்தை குறிப்பெடுத்தல் போன்ற நடைமுறைப் பயிற்சிகளும், விஞ்ஞான ரீதியான நீதித் துறை அமர்வுகளை நடத்துவதற்கு மூத்த நீதவான்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது. அத்துடன் கணனி பாடநெறிகள், இலத்திரனியல் பாடநெறிகள், உள விருத்தி, தடயவியல் மருத்துவக் கல்வி போன்ற திட்டங்களும் செயற்பணி உதவி பாடநெறிகளும் அது தொடர்பில் நிபுணத்துவத்தைப் பெற்றுள்ள வெளிவாரியான பயிற்றுவிப்பாளர்களை ஈடுபடுத்தி நடத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பயிற்சி பாடநெறிகளின் இலக்குகளும், நோக்கங்களும்

1. நீதியை நிலைநாட்டும் போது நீதித் துறை பதவியணியினர் மற்றும் நீதிபதிகளின் வகிப்பாகத்தையும் புரிந்து கொள்ளல்.

2. நீதித் துறை பதவியணியினரின் சட்ட ரீதியான மற்றும் அதற்குப் புறம்பான நீதித் துறை சார்ந்த நடவடிக்கைகளில் பொதுமக்களின் நம்பகத் தன்மை இல்லாது போதலை குறைப்பதற்கு நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டில் நீதித் துறை பதவியணியினருக்கான நெறிமுறைகள் கோவையின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளல்.

3. வழக்குரைஞர்கள் மற்றும் பொது மக்களின் சந்தேகத் அப்பால் சென்று தனிப்பட்ட நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டின் அடிப்படை விதிகளைப் புரிந்து கொள்ளல்.

4. நீதிமன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர், வழக்குரைஞர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் நீதித் துறையின் நடத்தை மற்றும் நீதித் துறையின் நுட்பங்கள் போன்றவற்றைப் புரிந்து கொள்ளுதல்.

5. நீதித் துறை பதவியணியினருக்கான நெறிமுறைகள் கோவையை மேம்படுத்தல் (எழுத்து நெறிமுறை கோவை மற்றும் சுய கட்டுப்பாட்டு நடத்தை நெறிமுறைக் கோவை)

சேவை ரீதியான பயிற்சி பாடநெறிகளில் உள்ளடங்கும் விடயங்கள்

1. நீதித் துறை நடத்தை, நெறிமுறைகள் மற்றும் நடைமுறை
2. கருத்தான சட்ட அறிவு (கருத்தான மற்றும் நடைமுறை சட்டம் - குற்றவியல், குடியியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகச் சட்டம், குற்றவியல் மற்றும் குடியியல் வழக்கு ஏற்பாட்டு நடைமுறை, ஆதாரச் சட்டம் போன்றவை)
3. சிறப்புச் சட்டங்கள்

4. தனிப்பட்ட சட்டங்கள்
5. மனித உரிமைகள்
6. ஊழல் எதிர்ப்புச் சட்டம்
7. கணனி அறிவு மற்றும் தகவல் தொழிநுட்பம்
8. அறிவுசார் சொத்துக்கள்
9. நீதித் துறை நிருவாகம் மற்றும் நீதித்துறை முகாமைத்துவம்
10. வழக்கு முகாமைத்துவம் மற்றும் வழக்கு போக்கு முகாமைத்துவம்
11. கணக்கு மற்றும் நிதி
12. ஒழுக்காற்று நடவடிக்கைகள்
13. சிறுவர்களுக்கான நீதி
14. நீதி மற்றும் சட்ட உதவிக்கான அணுகல்
15. தடயவியல் மற்றும் தடய மருத்துவவியல்
16. வழக்குத் தீர்ப்புக்களை எழுதுதல்.
17. தண்டனை விதிக்கும் கொள்கை மற்றும் அமுல்படுத்தல்
18. ஆராய்ச்சி முறைகள் மற்றும் கணனி அடிப்படையிலான நிகழ்நிலை ஆராய்ச்சிகளும், முறைமைகளும்
19. மாற்று தகராறு தீர்வுகள்
20. ஆளுமை மற்றும் திறன் விருத்தி
21. சுகாதார மேம்பாடு மற்றும் மனஅழுத்த முகாமைத்துவம்
22. பிரயோகப் பயிற்சி, வழக்குத் தீர்ப்புக்களை எழுதும் பயிற்சி, தீர்வுகளை வரைதல், குற்றச்சாட்டுக்களை தயாரித்தல், அடையாள அணிவகுப்பு, திடீர் மரண விசாரணைகளை நடத்துதல், வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்தை குறிப்பெடுத்தல், களப் பரிசோதனைகள் தயாரிப்பு

பயிற்சி முறைகள்

1. மையப்படுத்தப்பட்ட நேருக்கு - நேரான முறைமை
2. பன்முகப்படுத்தப்பட்ட / முன்னுரிமை அடிப்படையிலான நேருக்கு – நேர் முறை
3. நீதிமன்ற அடிப்படையிலான வழிகாட்டல் முறைமை
4. நியமிக்கப்பட்ட ஆலோசகர்களினால் மையப்படுத்திய வழிகாட்டல் முறைமை (நியமிக்கப்பட்ட வளவாளர்கள்)
5. வெவ்வேறு பதவியணியினருக்கான நேரடி முறைமை
6. தகவல் தொழிநுட்பம் மற்றும் இணையத் தள அடிப்படையிலான தொலைதூரக் கல்வி முறைமை
7. தினசரி பணி சாதனங்கள், தீர்ப்பாசன நூல்கள், செவிப்புல மற்றும் கட்புல பதிவு செய்யப்பட்ட கல்விச் சாதனங்கள்
8. மொடியுலர்
9. பாடநெறிக்கான கையேடுகள்
10. உசாத்துணை ஏடுகள் 11
11. ஆய்வு கருவிகள்
12. காணொளி மாநாடுகள்
13. நடைமுறை முறைகள், விவாத அமர்வுகள்
14. வருகைதருதல்
15. முன்வைத்தல்
16. கட்டுரை எழுதுதல்
17. ஆய்வுப் பணிகள்
18. தனிநபர் பாடநெறிக்கான கருவிகளை தயாரித்தல்
19. வெளிநாட்டுப் பயிற்சி முறைமை
20. வழிகாட்டல்கள்

ஆலோசனை வழங்கல் பயிற்சிப் பாடநெறி இருவகையான பயிற்சித் திட்டங்களைக் கொண்டது. அதாவது, பிரதம நீதியரசரால் நடத்தப்படும் நீதித் துறை அடிப்படையிலான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வளவாளர்களால் இயக்கப்படும் மையப்படுத்தப்பட்ட ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் ஆகும். இலங்கையில், ஆலோசனைகள் எந்தவித பதவிகளையும் கருதாது தனிப்பட்ட ரீதியில் பயிற்சியாக அளிக்கப்படுகிறது. ஆயினும், புதிய பயிற்சிக் கையேடுகள் மூலம் ஆலோசனை பயிற்சி நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவதுடன், அதற்கமைய உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதிகள் இருவர் தன்னார்வ வளவாளர்களாக நீதித் துறை பதவியணியினர், மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபையின் தவிசாளர்கள் போன்றோருக்கு ஆலோசனை வழங்குகின்றனர். ஆலோசகர்களால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. குற்றவியல் சட்டம் மற்றும் சாட்சி - ஆரம்ப நிலையிலே நீதிமன்ற அதிகாரத்துடனான மேன்முறையீடுகள் -

   உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதிகள் (ஆலோசகர்)


2. குடியியல் சட்டம் மற்றும் தொழில் சட்டம் - ஆரம்ப நிலையில் நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய மேன்முறையீடுகள் -

   உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதிகள் (ஆலோசகர்)

இந்த வகையான பயிற்சிகள் முக்கியமாக முன்கூட்டித் திட்டமிடப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல், இணையத் தளத்தை அடிப்படையாகக் கொண்ட முறைகள் போன்றவற்றுடன் முன் திட்டமிடப்பட்ட நேர்காணல் நிறுவன அமர்வின் ஊடாக நடத்தப்படுகிறது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்திறன்

1. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அது பின்வருமாறு.



2. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணியாட்களின் எண்ணிக்கை 71 ஆவது நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மற்றும் அதன் கீழ் இங்கு பின்வருமாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை
பணிப்பாளர்	01
பிரதிப் பணிப்பாளர்	01
ஆலோசகர்	02
கல்வி இணைப்பாளர்	01
செயலாளர்	01
கணக்கு உத்தியோகத்தர்	01
ஆய்வு உதவியாளர்	02
மென்பொருள் / வன்பொருள் தொழிநுட்பவியலாளர்	02
நூலக அதிபர்	01
முகாமைத்துவ உதவியாளர்	05
சாரதி	03
விடுதிக் காப்பாளர்	01
அலுவலகப் பணி உதவியாளர்	05

2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகள்

தொடர் இலக்கம்	செயலமர்வுகள், மாநாடுகள் / நிகழ் நிலை தொழிநுட்பத்தின் (இணைய) வாயிலாக நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள்.	சமூகமளித்த நீதிபதிகளின் பதவிப் பெயர்	பயிற்சித் திட்ட அமர்வுகளின் எண்ணிக்கை	சமூகமளித்த நீதிபதிகளின் எண்ணிக்கை	திகதி
1)	புதிதாக நீதித் துறை சார்ந்த பதவிகளில் உட்பிரவேசித்தல் தொடர்பான ஆரம்ப பயிற்சித் திட்டங்கள் - 2021/2022. (01 ஆவது இணைப்பு)	புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள்	38	46	2021/11/16 – 2022/03/11
2)	"நவீன கணனி குற்றங்கள் / மின்னியல் ஆதாரங்களின் ஏற்புடைமை மற்றும் மதிப்பீடு" எனும் தலைப்பின் கீழ் நிகழ் நிலைத் தொழிநுட்பத்தின் (இணைய) வாயிலாக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி. வளவாளர், போதகர் – கலாநிதி திரு ஹெரலிட் த கொஸ்தா – கணனி பாதுகாப்புக் கழகம், இந்தியா.	குற்றவியல் நீதி அதிகாரத்தை அமுல்படுத்தும் அனைத்து நீதித் துறை அலுவலகர்களுக்கும்.	01	175	2022/02/26
3)	புதிதாக நியமிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதிகளை புதிய பதவிக்குப் பழக்கப்படுத்தல் பற்றிய அறிமுக பயிற்சி பாடநெறி – 2022.	மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு	01	13	09/03/2022 , 12/03/2022
4)	"1990 ஆண்டின் 2 ஆம் இலக்க கடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாட்டு) சட்டம் மற்றும் நிதி குத்தகை மற்றும் நுகர்வோர் கடன் சட்டத்தின் கீழான நடைமுறைகள்" எனும்	குடியியல் (சிவில்) நீதி அதிகாரத்தைச் செயற்படுத்தும் சகல நீதித் துறை அலுவலகர்களுக்கும்.	01	136	2022/05/07

	தலைப்பின் கீழ் நிகழ் நிலை தொழிநுட்பத்தின் (இணைய) வாயிலாக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி. வளவாளர், போதகர் - கௌரவ நீதிபதி அர்ஜுன் ஒபேசேகர அவர்கள்.				
5)	"குற்றவியல் வழக்குகளில் சாட்சியங்களின் மதிப்பீடு : ஒரு நடைமுறை அணுகுமுறை" எனும் தலைப்பின் கீழ் நிகழ் நிலை தொழிநுட்பத்தின் (இணைய) வாயிலாக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி. வளவாளர் போதகர் – கௌரவ நீதிபதி விகும் ஏ. களுஆரச்சி.	குற்றவியல் நீதி அதிகாரத்தை செயற்படுத்தும் சகல நீதித் துறை அலுவலகர்களுக்கும், புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நீதித் துறை அலுவலகர்களுக்கும்.	01	157	2022/06/25
6)	"தொழில் நியாய சபை வழக்கு நடவடிக்கைகளின் போது மின்னியல் ஆதாரங்களை ஏற்றுக் கொள்ளல்" எனும் தலைப்பின் கீழ் நிகழ் நிலை தொழிநுட்பத்தின் (இணைய) வாயிலாக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி. வளவாளர் போதகர் - கௌரவ நீதிபதி ஏ. எல். ஷிரான் குணரத்ன.	தொழில் நியாய சபையின் தவிசாளர்களுக்கு	01	29	2022/07/09
7)	இலங்கை உடற்கூற்றியல் மருத்துவர்களின் கல்லூரியின் இணக்கத்துடன் "மன நலம் மற்றும் நீதிபதிகளுக்கான நலனோம்பு" எனும் தலைப்பின் கீழ் நிகழ் நிலைத் தொழிநுட்பத்தின் (இணைய) வாயிலாக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி.	80 பேர்களைக் கொண்ட மூத்த மாவட்ட நீதிபதிகளுக்கும், நீதவான்களுக்கும்	01	80	2022/07/16

8)	நீதிபதிகளுக்கான பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார (ESC) உரிமைகள் தொடர்பான வதிவிட செயலமர்வு.	மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும், மாவட்ட நீதிபதிகளுக்கும்.	01	30	2022/07/30 - 2022/07/31
9)	நீதிபதிகளுக்கான கல்வி மாநாடு – குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களுக்கு ஆதரவு அளித்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான மேல் நீதிமன்ற நீதிபதிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளும், உரையாடலும்.	மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு	01	49	2022/08/06 - 2022/08/07
10)	2022 ஆண்டு 02 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறை கோவை (திருத்தம்) சட்டத்துக்கு அமைய குற்ற முன் விளக்க மாநாடுகளை நடத்துவதற்கான நடைமுறை குறித்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வதிவிட செயலமர்வு.	மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு	01	38	2022/08/13 - 2022/08/14
11)	ஐரோப்பா ஒன்றியத்தின், கணனிக் குற்ற விரிவாக்கத் திட்டம் குறித்தான உலகலாவிய செயற்பாட்டின் (GLACY+) ஆதரவுடன், "நீதிபதிகளுக்கும், நீதவான்களுக்குமான புடாபெஸ்ட் பிரகடனம், கணனி குற்றங்கள் மற்றும் தொகுத்தமைப்புப் பயிற்சி" எனும் தலைப்பின் கீழ் நிகழ் நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக (இணைய) நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி.	மேல் மாகாணம் தவிர்ந்த அனைத்து மாகாணங்களினதும் நீதவான்களுக்கு	01	20	2022/08/13 - 2022/08/15

12)	ஐரோப்பா ஒன்றியத்தின், கணனிக் குற்ற விரிவாக்கத் திட்டம் குறித்தான உலகலாவிய செயற்பாட்டின் (GLACY+) ஆதரவுடன், "நீதிபதிகளுக்கும், நீதவான்களுக்குமான புடாபெஸ்ட் பிரகடனம், கணனி குற்றங்கள் மற்றும் தொகுத்தமைப்புப் பயிற்சி" எனும் தலைப்பின் கீழ் நிகழ் நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக (இணைய) நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி.	மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு	01	20	2022/08/19 - 2022/08/21
13)	நீதிபதிகளின் கல்வி சார் மாநாடு – 2015 ஆண்டு 04 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் ஆதரவு அளித்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் சட்டம் குறித்து நீதித் துறை அலுவலகர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியும், உரையாடலும்.	மேல் மாகாண நீதித் துறை அலுவலகர்களுக்கு	01	50	2022/08/20 - 2022/08/21
14)	சிறைச்சாலைகளின் நெரிசல்களைக் குறைப்பதற்கான தீர்வு மற்றும் நிவாரணமளித்தல் செயற்பாட்டுக்கு நீதி சார்ந்த பதில்கள் தொடர்பான வதிவிட செயலமர்வு	மத்திய மாகாண, வட மத்திய மாகாண, ஊவா மாகாண மற்றும் சப்பிரகமுவ மாகாண நீதவான்களுக்கு	01	40	2022/08/26 - 2022/08/28
15)	பிணை வழங்குதல் மற்றும் தண்டனை விதித்தல் குறித்து நீதித் துறை அலுவலகர்களுக்கான வதிவிட செயலமர்வு.	தென் மாகாணத்தின் மற்றும் வட மாகாணத்தின் நீதித் துறை அலுவலகர் மற்றும் கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களின் நீதித் துறை அலுவலகர் சிலர்	01	50	2022/09/30 - 2022/09/04
16)	பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார (ESC) உரிமைகள் தொடர்பான வதிவிட செயலமர்வு.	மேல் மாகாண, தென் மாகாண மற்றும் சப்பிரகமுவ மாகாணத்தின் குடியியல் (சிவில்) மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கும்,	01	34	

		குடியியல் (சிவில்) நீதி அதிகாரத்தை செயற்படுத்தும் தென் மாகாணத்தின் மற்றும் சப்பிரகமுவ மாகாணத்தின் நீதித் துறை அலுவலகர்களுக்கும்.			17/09/2022 - 18/09/2022
17)	பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார (ESC) உரிமைகள் தொடர்பான வதிவிட செயலமர்வு.	மத்திய மாகாணம், வட மத்திய மாகாணம், வட மாகாணம் வட மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் போன்ற மாகாணங்களில் அமைந்துள்ள குடியியல் (சிவில்) மேன் முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கும், குடியியல் (சிவில்) நீதி அதிகாரத்தை செயற்படுத்தும் மத்திய மாகாணம், வட மத்திய மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம், மற்றும் ஊவா மாகாணம் போன்ற மாகாணங்களின் நீதித் துறை அலுவலகர்களுக்கும்.	01	36	2022/09/24 -2022/09/25
18)	2022 ஆண்டு 02 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறை கோவை (திருத்தம்) சட்டத்துக்கு அமைய குற்ற முன் விளக்க மாநாடுகளை நடத்துவதற்கான நடைமுறை குறித்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வதிவிட செயலமர்வு.	மேல் மாகாணம், வட மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணம் போன்ற மாகாணங்களில் அமைந்துள்ள மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு	01	49	2022/10/01 - 2022/10/02
19)	நீதிபதிகளின் கல்வி மாநாடு – 2015 ஆண்டு 04 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் ஆதரவளித்தல் மற்றும்	மத்திய மாகாணம், வட மத்திய மாகாணம், சப்பிரகமுவ மாகாணம்,வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும்	01	37	2022/10/15

	பாதுகாப்பளித்தல் சட்டம் தொடர்பாக நீதித் துறை அலுவலகர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியும், உரையாடலும்.	ஊவா மாகாணம் போன்ற மாகாணங்களில் அமைந்துள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு			- 2022/10/16
20)	சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் சிறைச்சாலைகளின் நெரிசல்களை குறைப்பதற்கான தீர்வு மற்றும் நிவாரணமளிப்பு செயற்பாடுகளில் நீதி சார் பதில்கள் குறித்தான நீதவான்களுக்கான வதிவிட செயலமர்வு.	மேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் மற்றும் தென் மாகாணம் போன்ற மாகாணங்களின் நீதித் துறை அலுவலகர்களுக்கு	01	40	2022/10/21 - 2022/10/23
21)	சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் சிறைச்சாலைகளின் நெரிசல்களை குறைப்பதற்கான தீர்வு மற்றும் நிவாரணமளிப்பு செயற்பாடுகளில் நீதி சார் பதில்கள் குறித்தான நீதவான்களுக்கான வதிவிட செயலமர்வு.	மத்திய மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம், வட மேல் மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் சப்பிரகமுவ மாகாணம் போன்ற மாகாணங்களின் நீதித் துறை அலுவலகர்களுக்கு.	01	40	2022/10/28 - 202/10/30
22)	ஐக்கிய நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) ஆதரவுடன், "சர்வதேச தொழிலாளர் தர நிலைகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தவிசாளர்களின் வகிப்பாகம்" எனும் தலைப்பின் கீழ் வதிவிட செயலமர்வு.	தொழில் நியாய சபைகளின் தவிசாளர்கள் அனைவருக்கும்.	01	29	2022/11/05 - 2022/11/06
23)	மருத்துவ – சட்டம் செயற்பாடுகள் குறித்தான வதிவிட செயலமர்வு.	நீதித் துறை அலுவலகர்களுக்கு	01	40	2022/11/11 - 2022/11/13
24)	சிறைக் கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாதல் மற்றும் வேறு விதத்தில் குரூர கவனிப்புகளுக்கு ஆளாவதைத் தடுத்தல் மற்றும் அதற்கான	நீதித் துறை அலுவலகர்களுக்கு	01	35	2022/11/18 - 2022/11/20

	தீர்வுகளை எடுத்தல் தொடர்பில் நீதித் துறையின் பங்கு குறித்தான வதிவிட செயலமர்வு.				
25)	பாலின அடிப்படையில் பாகுபாட்டுக்கு ஆளாவதைத் தடுத்தல் மற்றும் நீதிக்கான பெண்களின் அணுகலை அதிகரிப்பது தொடர்பான நீதி சார் உரையாடல் எனும் தலைப்பில் வதிவிட செயலமர்வு.	நீதித் துறை அலுவலகர்களுக்கு	01	35	2022/11/26 - 2022/11/27
26)	நீதிபதிகளின் கல்வி மாநாடு – 2015 ஆண்டு 04 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் ஆதரவளித்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் சட்டம் தொடர்பாக நீதித் துறை அலுவலகர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியும், உரையாடலும்.	நீதித் துறை அலுவலகர்களுக்கு	01	54	2022/12/03 - 2022/12/04
27)	மாகாண ரீதியான மேல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு மற்றும் நடைமுறை விதிகள் குறித்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வதிவிட செயலமர்வு	மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு	01	87	2022/12/10 - 2022/12/11

தெளிவான கணக்கியல் கோட்பாடு

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் தத்துவங்களுக்கு இணங்க இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கணக்காளரால் பரிந்துரைக்கப்பட்ட கணக்கியல் நியமங்களின் அடிப்படையில் குறித்த நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

நிதி அறிக்கை

2022

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைக் கூற்று

விபரம்	குறிப்பு	2022		2021
		ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்
சொத்துக்கள்				
மீண்டுவரும் சொத்துக்கள்				
காசும் காசுக்கு சமமானவையும்	3	344,924.63		334,743.37
நிச்சயமற்ற கணக்குகள்		-		7,142,089.51
தொகை (அலுவலக எழுதுபொருட்கள்)		719,347.42		873,845.10
			1,064,272.05	8,350,677.98
மீண்டுவராத சொத்துக்கள்				
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	4		3,710,933.47	4,338,971.12
புலனாகாத சொத்துக்கள்	5		3,802,214.18	3,899,714.18
மீளச் செலுத்தும் வைப்புக்கள்			1,000.00	-
மொத்த சொத்துக்கள்			8,578,419.70	16,589,363.28
பொறுப்புக்கள்				
கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள்		569,613.00		530,460.00
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	6	1,107,555.00		1,031,315.00
திரட்டிய செலவுகள	7	200,008.56		175,922.99
பணிக் குழு சார்ந்த கொடுப்பனவுகள்		-		4,668.16
			1,877,176.56	1,742,366.14
மீண்டுவராத பொறுப்புக்கள்				
மொத்தப் பொறுப்புக்கள்			1,877,176.56	1,742,366.14
			6,701,997.14	14,846,997.14
தேறிய சொத்துக்கள்				
தேறிய சொத்துக்கள் / பங்குகள்				
மூலதன வழங்கீடு		17,003,575.60		17,744,073.05
திரட்டப்பட்ட நிதி				
கழிக்கப்பட்டது : ஆண்டுக்கான	8	(3,377,075.91)		(1,861,351.32)
பற்றாக்குறை		(6,925,256.55)	6,701,243.14	(1,035,724.59)
				14,846,997.14
			6,701,243.14	14,846,997.14

இலங்கை நீதிபதிகளின் நிறுவகத்தின் நிதி அறிக்கை இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
பக்க இலக்கம் 05 மற்றும் 06 இல் காட்டப்படும் கணக்கியல் கோட்பாடும் பக்க இலக்கம் 07 முதல் 14 வரை காட்டப்படும் குறிப்புக்கள் போன்றவை இந்த நிதிக் கூற்றுக்களுக்கு அவசியமான அம்சங்களாகக் கருதுதல் சாலச் சிறந்தது.

ஒப்பம் இட்டது /கையொப்பம்
யூ. வீ. ஆர். ராஜகருணா
கணக்காளர்
இல 80, நீதிமன்ற மாவத்தை
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

கொழும்பு 12.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்திறன் தொடர்பான கூற்று.

	குறிப்பு	2022		2021
		ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்
வருமானம்				
மீண்டுவரும் மானியப் பெறுகைகள்	9	12,788,974.41		14,829,329.62
சேமிப்புக் கணக்கிலிருந்து பெற்ற வட்டி		10,181.26		9,880.89
பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியக் கடன்களைத் தீர்த்தல்.		1,258,897.45		53,010.00
நிழற்பட பிரதிகள் வருமானம்		-		-
இதர வருமானங்கள்		62,130.62		-
ஏல விற்பனை				
மொத்த வருமானம்			14,120,184.01	14,892,220.51
கழிக்கப்பட்டது : செலவினம்				
சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நலன்கள்				
சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்	10	7,758.566.01		6,642,494.67
ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவினம்		776,883.35		684,218.22
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய செலவினம்		194,220.84		170,829.81
பணிக் குழுவை பயிற்றுவித்தல்		108,173.75		-
மேலதிக நேரக் கொடுப்பனவு		42,470.57		72,082.11
பிற கொடுப்பனவுகள்		107,790.32		103,863.29
பணிக் கொடை		76,240.00		226,275.00
			9,064,644.84	7,899,763.10
செயற்பாட்டு நடவடிக்கைகள்				
மாநாடு மற்றும் பயிற்றுவிப்புச் செலவுகள்	11	5,827.615.00		1,154.110.50
வெளிநாட்டு பயிற்சித் திட்ட செலவினங்கள்	12	119.609.60		-
பாதுகாப்புக் கட்டணங்கள்		1,260,095.03		1,201,412.51
வருடாந்த பங்களிப்புத் தொகை கட்டணங்கள்	13	-		1,000,000.00
			7,207,319.63	3,355.523.01
விநியோகம் மற்றும் பாவனை செய்த நுகர்வுப் பொருட்கள்				
தபால் கட்டணங்கள்		37,530.00		116,400.00
அலுவலக எழுதுபொருள் செலவுகள் அச்சீட்டு செலவினங்கள்		283,644.68		71,924.43
எரிபொருள்		203,408.44		796,394.60
பிற சேவைகளும், விநியோகங்களும்		272,480.00		107,818.00
	14	123,222.00		
				131,532.00
			920,285.12	1,224,068.43
நிதிச் செலவினங்கள்				
வங்கிக் கட்டணங்கள்				
		3,891.22		5,000.00
			3,891.22	
இதர செலவினங்கள்				
பிரயாணச் செலவுகள்		20,871.88		12,847.46
வாகனப் பராமரிப்பு		63,357.90		19,816.10
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு	15	292,045.04		408,460.80
மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்		210,125.00		2,557.50
தொலைபேசி மற்றும் வலைத்தள கட்டணங்கள்		524,182.68		492,532.93
சுத்திகரிப்புச் செலவினம்		628,030.00		551,983.00
மின்சாரம் மற்றும் நீர் விநியோகச் செலவுகள்		574,996.59		371,534.00
தேய்மானம் மற்றும் தேய்வுகள் கணக்காய்வு கட்டணங்கள்	16	1,243,937.66		1,305,998.77
		291,753.00		277,860.00
			3,849,299.75	3,443,590.56
மொத்தச் செலவினம்			21,045,440.56	15,927,945.10
திரட்டப்பட்ட நிதியத்தின் மிகை (பற்றாக்குறை)			(6,925,256.55)	(1,035,724.59)

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை.

	குறிப்பு	2022		2021	
		ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்
செயற்பாட்டு நடவடிக்கைகள்; பெறுகை					
அமைச்சினால் கிடைத்த மீண்டுவரும் அலுவல் முற்பணம்		18,755,961.98		13,922,672.79	
கிடைத்த வட்டி		10,181.26		9,880.89	
கடந்த ஆண்டுக்குரிய காசோலை இரத்து		-		2,100.00	
பிற வருமானங்கள்		10,181.26		-	
யக்கப்பாட்டு நடவடிக்கைகளினால் காசுப் பாய்ச்சல்			18,828,274.13		13,934,653.68
கொடுப்பனவு					
சம்பளம், கூலி மற்றும் பணியாளர் நலன்கள்	17	8,986,838.63		(7,876,206.96)	
செயற்பாட்டு நடவடிக்கைகள்	18	7,414,206.28		(3,313,447.75)	
விநியோகமும் பயன்பாட்டு வாடிக்கையாளர்கள்	19	2,408,531.74		(2,725,093.08)	
நிதிச் செலவினம்	20	3,891.22		(5,000.00)	
முத்திரைக் கட்டணங்கள்		4,650.00		(5,050.00)	
செயற்பாட்டு நடவடிக்கைகளினால் காசு வெளிப் பாய்ச்சல்.			18,818,117.87		(13,924,797.79)
செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப் பாய்ச்சல்			10,156.26		9,855.89
நிதி நடவடிக்கைகளினால் கையிருப்புப் காசுப் பாய்ச்சல்					
முதலீட்டு மானியங்கள் பெறுகை		518,400.00	518,400.00	412,700.00	412,700.00
நிதி நடவடிக்கைகளினால் கையிருப்பு காசுப் பாய்ச்சல்					
முதலீட்டு நடவடிக்கைகளினால் கையிருப்பு காசுப் பாய்ச்சல்					
நிலையான சொத்துக் கொள்வனவு	21	518,400.00		(22,700.00)	
				(389,975.00)	
முதலீட்டு நடவடிக்கைகளில் தேறிய கையிருப்பு காசுப் பாய்ச்சல்			(518,400.00)		(412,675.00)
கையிருப்புப் பணம் மற்றும் கையிருப்பு பண தளும்பல்களின் நிகர அதிகரிப்பு		10,181.26			9,880.89
தொடக்கக் காலப் பகுதியில் கையிருப்புப் பணம் மற்றும் கையிருப்புப் பணத் தளும்பல்கள்		334,743.37			324,862.48
இறுதிக் காலப் பகுதியில் கையிருப்புப் பணம் மற்றும் கையிருப்புப் பணத் தளும்பல்கள்		344,924.63			334,743.37

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய அறிக்கை

விபரம்	குறிப்பு	பங்களிப்பு மூலதனம்	ஏனைய ஒதுக்கங்கள்	திரட்டப்பட்ட மிகை (பற்றாக்குறை)	மொத்தம் (ரூ.)
2022.01.01 ஆந் திகதிக்கு நிலுவை		**17,744,073.70**	**-**	**(2,897,075.91)**	**14,846,997.14**
ஆண்டுக்காகக் கிடைக்கப் பெற்ற மூலதன மானியங்கள்		**518,400.00**		**-**	**518,400.00**
மூலதன வழங்கீடுகள் தேய்வு	**22**	**(1,258,897.45)**	**-**	**-**	**(1,258,897.45)**
முன்னைய ஆண்டு சீராக்கம்	**23**	**-**		**(480,000.00)**	**(480,000.00)**
வருடத்தினுள் மிகை (பற்றாக்குறை)		**-**		**(6,925,256.55)**	**(6,925,256.55)**
2022.12.31 ஆந் திகதிக்கு நிலுவை		**17,003,575.05**	**-**	**(10,302,332.46)**	**6,701,243.14**

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

முக்கிய கணக்கியல் கோட்பாடுகள்

2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

1. வேறு விதமாகக் குறிப்பிட்டுக் கூறப்படாவிடில் நிதி அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து மதிப்புக்களும் இலங்கை ரூபாயில் காட்டப்படும்.

2. பணவீக்கக் காரணிகளில் சீர் செய்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

3. **அரச மானியங்கள்**

சமர்ப்பிக்கும் ஒழுங்கு முறைகள் அடங்கிய அரச மானியங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் பின்வருமாறு காட்டப்படுகிறது.

(அ) சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான அரச மானியங்கள், சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்தகவு மீதான வருமானமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) அதேபோல அதன் மீது செலவினங்களாகக் கிடைக்கும் பிற மானியங்கள் இலாப நட்டக் கணக்கில் சேர்க்கப்படும்.

4. **தொகைகளின் பெறுமதி**

கடந்த கால செலவினங்களில் தொகைகளின் பெறுமதி காட்டப்படும்.

5. **பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

நிதிக் கூற்றினுள் ஒய்வூதியப் பணிக்கொடைக்கு இலங்கை கணக்கியல் நியமங்களின் பிரகாரம் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. பொறுப்புக்களுக்கு வெளிவாரியாக நிதி அளிக்கப்பட மாட்டாது.

6. **ஆதனங்களும், இயந்திர, உபகரணங்களும்**

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், குறித்த அடிப்படையில் பின்வரும் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டு. திரட்டப்பட்ட தேய்வுகள் கழிக்கப்பட்டு, செலவினங்கள் அறிக்கை இடப்படும்.

7. **தேய்மானம் மற்றும் தேய்வுகள்**

(அ) அனைத்து சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் செலவினங்களின் மீது தேய்மானத்துக்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படும். கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை பாவனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய வாழ்நாளை மதிப்பிட்டு, சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்குள்ள தினத்தில் தேய்வாகும்.

(ஆ) கட் புலனாகாத சொத்துக்கள், மதிப்பீடு செய்யப்பட்ட அவற்றின் பயன்பாட்டு வாழ்தகவுக் காலம் பூராகவும் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படும்.

(இ) கால வரையறையற்ற பயன்பாட்டு வாழ்தகவைக் கொண்டதாக தீர்மானிக்கப்படும் புலனாகாத சொத்துக்கள், தேய்மானம் செய்யப்படாத போதிலும், சொத்துக்கள் நலிவடையக் கூடும் எனத் தோன்றும் சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளும், மாற்றங்களும் இருப்பின், அவை குறைபாடு பரிசோதிக்கப்படும்.

பின்வரும் விகிதங்களுக்கு அமைய , நேர்கோட்டு அடிப்படையில் வழங்கப்படும் நிலையான சொத்துக்களின் தேய்மானம் ;

அலுவலக உபகரணங்கள்	20%
வீட்டுத் தளபாடங்களும், அவற்றைப் பொருத்துதலும்	12.5%
நூலக நூல்கள்	10%
கணனி உபகரணங்கள்	25%
மின் சாதனங்கள்	20%
பென்ட்ரி உருப்படிகள்	12.5%
பயணப் பைகள்	10%
இயந்திர பொறிகள்	12.5%

கட் புலனாகாத சொத்துக்களின் தேய்மானம் பின்வரும் விகிதங்களுக்கு அமைய , நேர்கோட்டு அடிப்படையின் மீது வழங்கப்படும் ;

கணக்கியல் பெக்கேஜ்	25%

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை பற்றிய குறிப்பு

01 ஆவது குறிப்பு

நிருவாக தகவல்கள்

அறிக்கையிடும் பொருள்

அறிக்கையிடல் பொருள் என்பது 1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டத்தினால் கூட்டிணைந்த இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

02 ஆவது குறிப்பு

தயார்படுத்தல் அடிப்படை மற்றும் ஏனைய கருத்திற் கொள்ளக் கூடிய கணக்கியல் கோட்பாடுகள்

தயார்படுத்தல் அடிப்படை

- **உடன்பாட்டு அறிக்கை**

2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிதி நிலை கூற்று, 2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்திறன் அறிக்கை, விநியோகிக்கப்பட்ட வணிக பங்குகளின் பெறுமதி மாற்றம் பற்றிய அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கை, 2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மற்றும் அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கியல் கோட்பாட்டு மற்றும் நிறுவகத்தின் நிதி அறிக்கை குறிப்பு, இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு (SLPSAS) இணங்க முக்கியமான சகல அம்சங்களும்.

- **பயனுள்ள தொழிற்பாடு**

பயனுள்ள நிறுவனம் உள்ளதாகக் கருதி நிறுவகத்தின் நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருத்தல்.

- **கணக்கியல் கோட்பாடுகளின் உடன்பாடு**

நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சிற்சில நிலுவைகள் நிதி அறிக்கைகளை முறையாக முன்வைப்பதற்காக மீள சரிசெய்தல் / வேறுபாடுள்ள இலக்கங்களுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- **நிதியாண்டு**

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதி அறிக்கை 2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த பன்னிரண்டு மாத காலப் பகுதிக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

- **புழக்கத்தில் உள்ள மற்றும் செல்லுபடியாகும் நாணயத்தில் அறிக்கையிடலை முன்வைத்தல்**

நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- **நிதி நிலை கூற்றில் தினத்துக்கு பின்னரான நிகழ்வுகள்**

நிலுவை பத்திரங்களுக்கு பின்னான முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. உரிய சந்தர்ப்பங்களில் சரிசெய்யப்பட்டிருப்பதுடன், இல்லாதவிடத்தில் நிதி அறிக்கைகளில் போதியளவு கண்டறியப்பட்டள்ளன.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி கூற்று தொடர்பிலான குறிப்புக்கள்

03 ஆம் குறிப்பு

காசும் காசுக்கு சமனாவைகளும்

விபரம்	2022	2021
டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு இலங்கை .ரூ	-	-
நடைமுறைச் கணக்கு	344,924.63	334,743.37
சேமிப்புக் கணக்கு	344,924.63	334,743.37

04 ஆம் குறிப்பு
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
09 ஆம் பக்க இலக்கத்துக்கு செல்லவும்.

05 ஆம் குறிப்பு
கட் புலணாகாத சொத்துக்கள்

சட்டத் தரவுச் தளம்	2022	2021
கணக்கியல் மென்பொருள்	3,517,995.00	3,517,995.00
(-) திரட்டப்பட்ட தேய்மானம்		390,000.00
390,000.00	284,219.18	(8,280.82)
(105,780.82)		
	3,802,214.18	3,899,714.18

06 ஆம் குறிப்பு
பணிக் கொடைக்கான ஏற்பாடுகள்

நியமனத் திகதி	இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினுள் 2022.12.31 ஆந் திகதிக்கு சேவைக் காலம்	சேவைக் காலம் வருடத்தில்	பெயர்	பதவிப் பெயர்	2022.12.31 ஆந் திகதிக்கு நிகர சம்பளம்	ஒரு வருடத்துக்குரிய பணிக்கொடை ஒதுக்கம்
2018.10.01	04 வருடமும் 02 மாதங்களும் 30 நாட்களும்	4	எச். எம். குமுதுனி மதுவந்தி	செயலாளர்	67,850.00	135,700.00
2020.03.20	02 வருடங்கள் 09 மாதங்கள் 10 நாட்கள்	2	யூ. வீ. ஆர். ராஜகருணா	கணக்காளர்	63,725.00	63,725.00
2017.06.01	03 வருடங்கள் 06 மாதங்கள் 30 நாட்கள்	5	டபிள்யூ. எம். எம். கருணாரத்ன	ஆய்வு அலுவலகர்	62,490.00	156,225.00
2015.10.15	07 வருடங்கள் 02 மாதங்கள் 16 நாட்கள்	7	ஏ. டீ. ஜீ. குணதிலக	வன் பொருள் மற்றும் மென் பொருள் தொழிநுட்பவியலாளர்	40,210.00	140,735.00
2016.06.27	06 வருடங்கள் 06 மாதங்கள் 04 நாட்கள்	6	எச். கே. டீ. எம் செனெவிரத்ன	விடுதிக் காப்பாளர்	34,050.00	102,150.00
2016.06.27	06 வருடங்கள் 08 மாதங்கள்	6	டபிள்யூ. ஏ. மேனகா பத்மசீலி	அலுவலகப் பணி உதவியாளர்	34,050.00	102,150.00
2016.06.27	06 வருடங்கள் 08 மாதங்கள்	6	யூ. ஏ. நதீஷா சதுரங்கனி	அலுவலகப் பணி உதவியாளர்	34,050.00	102,150.00
2006.01.01	16 வருடங்கள்	16	ஜீ. டப்ளியூ. ரஞ்சித்	சாரதி	38,090.00	304,720.00
						1,107,555.00

	2022	2021
2022/01/01 திகதிக்கு ஒதுக்கீடுகள்	1,031,315.00	888,915.00
தீர்க்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	-	(83,875.00)
2022 ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்	1,107,555.00	1,031,315.00
ஆண்டுக்கான பணிக்கொடை கொடுப்பனவு செலவினம்	76,240.00	226,275.00

07 ஆம் குறிப்பு
திரட்டிய செலவுகள்

செலுத்தப்பட வேண்டிய தொலைபேசி விலைப் பட்டியல்	65,835.05	33,436.85
செலுத்தப்பட வேண்டிய ஆலோசனை கொடுப்பனவுகள்	55,524.14	55,524.14
செலுத்தப்பட வேண்டிய பாதுகாப்புப் பணியாளர் கட்டணங்கள்	53,760.00	80,996.00
செலுத்தப்பட வேண்டிய சுத்திகரிப்புச் செலவினம்	2,109.37	-
செலுத்தப்பட வேண்டிய அச்சீட்டுச் செலவினம்		
செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் செலவினம்	22,780.00	5,966.00
	200,008.56	175,922.99

08 ஆம் குறிப்பு
திரட்டிய நிதியத்துக்கான சீராக்கம்

விபரங்கள்	2022	2021
2022/01/01 ஆந் திகதிக்கு நிலுவை	(2,897,075.91)	(3,768,070.97)
ஒதுக்கீடு சம்பந்தமான பணிக்கொடை சீராக்கம் - ஷானிகா லக்ஷாணி	-	19,500.00
செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் சரிசெய்தல் - 2020	-	1,000.00
பாதுகாப்புக் கட்டணச் செலவுகள் மிகைக் கட்டணங்கள் - 2019	-	83,286.23
ஒதுக்கீடு சம்பந்தமான நிறுவனக் கட்டணங்கள்	-	73,220.77
F/A 2019 தொடர்பான காசோலையை இரத்து செய்தல்	-	2,100.00
அரச மானிய தேய்மானம் - 2021 இக்கு முன்	-	1,321,460.65
கணக்காய்வுக் கட்டண மிகை / பற்றாக்குறை ஒதுக்கீடு 2017-2020	(480,000.00)	406,152.00
2022/12/31 ஆம் திகதிக்கு நிலுவை	(3,377,075.91)	(1,861,351.32)

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான குறிப்புகள்.

04 ஆம் குறிப்பு
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்.

செலவினம்	2022 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு நிலுவை	ஆண்டின் சேர்மானங்கள்	ஆண்டின் வெளியேற்றம்	2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை	2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை
அலுவலக உபகரணங்கள்	1,522,454.25	518,400.00	-	2,040,854.25	1,522,454.25
மரத் தளபாடங்களும் பொருத்துதலும்	3,056,725.30	-	-	3,056,725.30	3,056,725.30
	7,353,108. 40	-	-	7,353,108. 40	7,353,108. 40

நூலக நூல்கள்	44,681,712.49	-	-	44,681,712.49	44,681,712.49
கணனி உபகரணங்கள்	1,364,437.73	-	-	1,364,437.73	1,364,437.73
மின் சாதனங்கள்	121,858.33	-	-	121,858.33	121,858.33
பென்ரி உருப்படிகள்	20,100.00	-	-	20,100.00	20,100.00
பயணப் பைகள்	1,266,905.00		-	1,266,905.00	1,266,905.00
இயந்திர சாதனங்கள்	59,387,301.50	518,400.00	-	59,905,701.50	59,387,301.50

தேய்மானம்	2022 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு நிலுவை	ஆண்டின் தேய்மானங்கள்	ஆண்டின் வெளியேற்றம்	2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை	2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை
அலுவலக	1,522,454.25	78,115.07	-	1,600,569.32	1,522,454.25
உபகரணங்கள்	2,590,629.38	181,533.56	-	2,772,162.94	2,590,629.38
மரத் தளபாடங்களும்	3,940,179.45	714,171.51	-	4,654,350.96	3,940,179.45
பொருத்துதலும்	44,663,723.52	5,675.00	-	44,669,398.52	44,663,723.52
நூலக நூல்கள்	1,364,437.73	-	-	1,364,437.73	1,364,437.73
கணனி உபகரணங்கள்	105,876.23	6,569.39	-	112,445.62	105,876.23
மின் சாதனங்கள்	18,090.00	2,010.00	-	20,100.00	18,090.00
பென்ரி உருப்படிகள்	842,939.82	158,363.13	-	1,001,302.94	842,939.82
பயணப் பைகள்	55,048,330.38	1,146,437.66	-	56,194,768.03	55,048,330.38
இயந்திர சாதனங்கள்					
				3,710,933.47	4,338,971.12

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான குறிப்புகள்.

09 ஆம் குறிப்பு

அரசாங்க மானிய பெறுகைகள்	2022	
ஜனவரி	1,500,000.00	1,750,000.00
பெப்ரவரி	1,000,000.00	2,000,000.00
மார்ச்	3,320,000.00	1,000,000.00
ஏப்பிரல்	1,000,000.00	500,000.00
மே	1,050,000.00	500,000.00
ஜூன்	1,543,000.00	500,000.00
ஜூலை	1,543,000.00	500,000.00
ஆகஸ்த்து	1,300,000.00	1,500,000.00
செப்டம்பர்	4,862,000.00	1,000,000.00
அக்டோபர்	1,200,000.00	1,000,000.00
நவம்பர்	(6,065,619.51)	1,691,200.00
திசம்பர்	122,891.98	2,394,172.79
	12,132,272.47	14,335,372.79
மூலதன ஒதுக்கங்களுக்கான ஒப்படை	(518,400.00)	(412,700.00)
	11,613,872.47	13,922,672.79

நீதி அமைச்சினால் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள்		
மின் சக்தி மற்றும்		
நீர் விநியோக செலவுகள்	574,996.59	371,534.00
பாதுகாப்பு செலவுகள்	600,105.35	535,122.83
	12,788,974.41	14,829,329.62

10 ஆம் குறிப்பு
சம்பளங்களும், வேதனங்களும்.

நிரந்தர பணிக் குழு – ஊழியர் சேமலாப நிதி பற்றுக்கள்	7,221,291.01	5,727,567.17
ஆலோசனைக் கொடுப்பனவுகள் - ஊழியர் சேமலாப நிதி தவிர்ந்த பற்றுக்கள்.	537,275.00	914,927.50

	7,758,566.01	6,642,494.67

11 ஆம் குறிப்பு
கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி செலவுகள்

உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு தேநீர் மற்றும் ஏனைய விருந்து உபசரிப்புச் செலவுகள்	71,615.00	210,710.50
செயலமர்வுகள் மற்றும் உள்நாட்டு பயிற்சிகள்	34,000.00	29,500.50
பட்டப்பின் படிப்பு – சட்ட அலுவலகர்	5,722,000.00	913,900.00
	5,827,615.00	1,154,110.50

12 ஆம் குறிப்பு
வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான செலவினம்

விமானச் சீட்டுக்களுக்கான கட்டணம்	-	-
பயணக் காப்புறுதி	-	-
சம்பந்தப்பட்ட நாளாந்தக் கொடுப்பனவுகள்	119,609.60	-
நிறுவனக் கொடுப்பனவுகள்	-	-
கம்பளி ஆடைகளுக்கான செலவுகள்	-	-
	119,609.60	119,609.60

13 ஆம் குறிப்பு
வருடாந்த பங்களிப்புத் தொகை கட்டணங்கள்

வருடாந்த பங்களிப்புத் தொகைக் கட்டணங்கள் - லோ நெட்	-	1,000,000.00

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்.

14 ஆம் குறிப்பு
பிற சேவைகளும் விநியோகங்களும்

பிற நடவடிக்கைகளின் போதான தேநீர் உபசரிப்பு செலவுகள்	101,072.00	27,852.00
பிற செலவுகள்	9,350.00	4,950.00
பணிக் குழுவின் நலனோம்பு	4,900.00	-
ஆட்சேர்ப்புச் செலவுகள்	-	98,730.00
விநியோகம் மற்றும் வாடிக்கையாளர் பாவனைகள்	7,900.00	-
	123,222.00	131,532.00

15 ஆம் குறிப்பு
கட்டிடங்கள், இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரண பராமரிப்பு

பழுது பார்த்தல் மற்றும் கணனிகளை, சாதனங்களை மீள நிறுவுதல்.	6,375.00	29,935.00
அச்சு இயந்திரங்களுக்கான டோனர்	284,230.04	356,755.80
கட்டிடங்கள் மற்றும் உபகரணப் பராமரிப்பு	1,440.00	21,770.00
இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் தொலைபேசி வலையமைப்பு	-	-
	292,045.04	408,460.80

16 ஆம் குறிப்பு
தேய்மானங்கள் மற்றும் தேய்வுகள்

அலுவலக உபகரணங்கள்	78,115.07	-
நூலக நூல்கள்	714,171.51	735,310.84
மரத் தளபாடங்களும் பொருத்துதலும்	181,533.56	382,090.66
கணனி உபகரணங்கள்	5,675.00	4,711.03
மின் காப்புறுதி	-	-
பென்றி உருப்படி	6,569.39	5,232.29
பயணப் பைகள்	2,010.00	2,010.00
இயந்திர பொறிகள்	158,363.13	158,363.13
கட் புலனாகாத சொத்துக்களின் தேய்மானம்	97,500.00	8,280.82
	1,243,937.66	1,305,998.77

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்.

காசுப் பாய்ச்சல் அறிக்கை தொடர்பான குறிப்புகள்
காசுப் பாய்ச்சல் அறிக்கை நேரடி முறைமையின் அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

17 ஆம் குறிப்பு

	2022	2021
சம்பளங்களும், வேதனங்களும், பணியாளர் நலன்களும்		
சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்	6,733,706.60	5,335,883.43
ஆலோசனைக் கட்டணங்கள்	511,677.50	1,048,802.50
ஊழியர் சேமலாப நிதியச் செலவினம்	1,294,958.48	1,138,712.35
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் செலவினம்	194,220.84	170,829.81
மேலதிக நேரக் கொடுப்பனவு	45,176.46	77,603.87
சீருடைக் கொடுப்பனவு	4,000.00	-
பணிக் குழுவுக்கான பயிற்றுவிப்புக்கள்	108,098.75	-
பணிக்கொடை கொடுப்பனவுகள்	-	64,375.00
பண்டிகை முற்பணம்	95,000.00	40,000.00
	8,986,838.63	7,876,206.96

18 ஆம் குறிப்பு

செயற்பாட்டு நடவடிக்கைகள்		
மாநாடுகள் மற்றும் பயிற்சிச் செலவினம்	34,000.00	29,500.00
நீதிபதிகளுக்குச் செலுத்திய எல் எல் எம் பாடநெறிக்கான கட்டணங்கள்	5,722,000.00	913,900.00
வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள்	119,609.60	366,490.57
மாநாடுகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கான தேநீர் விருந்துபசார செலவினம்	138,707.00	238,562.50
நேர்முகப் பரீட்சைகளை நடத்தியமைக்கான செலவுகள்	-	98,730.00
பாதுகாப்புக் கட்டணங்கள்	666,289.68	666,289.68
வருடாந்த பங்களிப்புத் தொகைக் கட்டணங்கள்	1,000.00	999,975.00
கணக்காய்வுக் கட்டணங்கள்	732,600.00	-
	7,414,206.28	3,313,447.75

19 ஆம் குறிப்பு

விநியோகம் மற்றும் பாவனை செய்த நுகர்வுப் பொருட்கள்

தபால் கட்டணங்கள்	37,530.00	116,400.00
அலுவலக எழுதுபொருட் கொள்வனவு	129,147.00	242,847.58
எரிபொருள் செலவினங்கள்	249,341.00	101,852.00
பிற சேவைகளும் விநியோகங்களும்	22,150.00	4,950.00
பிரயாணச் செலவுகள்	20,871.88	12,847.46
வாகன பராமரிப்பு	63,322.90	19,816.10
சேவைகளும், பராமரிப்பும்	284,205.04	-
கணனி செலவினங்கள்	6,350.00	-
அச்சீட்டு செலவினங்கள்	203,383.44	799,394.00
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு	1,440.00	408,260.80
தொலைபேசி மற்றும் வலைத் தளக் கட்டணங்கள்	491,784.48	490,355.64
சுத்திகரிப்பு கட்டணங்கள்	688,971.00	528,812.00
மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்	210,025.00	2,557.50
	2,408,531.74	2,725,093.08

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்

20 ஆம் குறிப்பு

நிதிச் செலவினம்

வங்கிக் கட்டணங்கள்	3,891.22	5,000.00
	3,891.22	5,000.00

21 ஆம் குறிப்பு

நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.

கணனி உபகரணங்கள்	-	22,700.00
அலுவலக உபகரணங்கள்	518,375.00	-
	518,375.00	22,700.00

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்.

22 ஆம் குறிப்பு

	2022	2021
மூலதனச் செலவின் தேய்மானம்		
மூலதனச் செலவின் தேய்மானம் - 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட	78,115.07	-
மூலதனச் செலவின் தேய்மானம் - 2022 ஆம் ஆண்டுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட	1,180,782.38	-
	1,258,897.4	

23 ஆம் குறிப்பு

முன்னைய ஆண்டின் சீராக்கம்

கணக்காய்வுக் கட்டணங்களின் மிகை/பற்றாக்குறையான ஒதுக்கம்	480,000.00	406,152.00
	480,000.00	406,152.00

சவால்கள்

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது நீண்ட காலப் பயணப் பாதையினுள் சர்வதேச நீதித் துறை பயிற்சிகளை பெற்றுக் கொள்ளுதல், ஏனைய சட்டக் கல்வி நிறுவனங்கள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கியக் குடியரசின் நீதித் துணைத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் பங்காளர் நிலையைக் கட்டியெழுப்புதல் ஆகிய பல மா பெரும் வெற்றிகளை எட்டியுள்ளது.
அவ்வாறாயினும், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னிலையில் மேலும் பல சவால்களை இவ்விதம் காட்டலாம்.

- அடிப்படை வசதிகள் அனைத்தையும் கொண்ட சட்டக் கல்வி நிறுவனத்தை கொண்டு நடத்திச் செல்வதற்கென ஒதுக்கப்பட்ட கட்டிடத்தைப் பெறுவதற்கான பெரும் தேவை.
- கால தாமதமாகும் திணைக்களத்தின் நடைமுறைகள்
- திட்டங்களை செயற்படுத்தும் போது ஏற்படும் நிதி வரம்புகள்.

நன்றி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு வழங்கிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் பாராட்டி இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பின்வரும் நிறுவனங்களுக்கும், நபர்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

1. முகாமைத்துவச் சபை
2. நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் நீதி அமைச்சின் பணிக் குழு
3. நீதி சேவைகள் ஆணைக்குழு மற்றும் அதன் பணிக் குழு
4. பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும் பொதுத் திறைசேரியின் பணிக் குழு
5. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
6. கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அவரது பணிக் குழு
7. சிறைச்சாலை அத்தியெட்சகர் மற்றும் அவரது பணிக் குழு
8. உயர் நீதிமன்றத்தின் பதிவாளர்
9. உயர் நீதிமன்றத்தின் மாஷல்
10. கொழும்பு சட்ட வைத்திய அலுவலகர்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

JLO/B/SLJI/FA/2022/02 திகதி – 2023 மே 29 ஆந் திகதி

பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களும், பிற சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் குறித்தான 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவுக்கு அமைவான கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் நிதி நிலை கூற்று மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி செயற்திறன் அறிக்கை, நிகர சொத்துக்கள் மாற்ற அறிக்கை மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களையும், முக்கிய கணக்கியல் கோட்பாடுகளின் சராம்சங்களையும் உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இல 38 ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) சட்டத்தின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர, நிறுவனத்தின் 2022 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலை மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயற்பாடுகளும், காசுப் பாய்ச்சலும் இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலையை எடுத்துக் காட்டுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை

(அ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 01 இன் 53 ஆவது பந்தியின் பிரகாரம் மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட தேறிய சொத்து மாற்ற அறிக்கையினுள் கடந்த காலப் பகுதி தொடர்பில் ஒப்பீட்டளவிலான தகவல்களை வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 02 இல் முன் வைக்கப்படுகின்ற மாதிரிகளுக்குப் புறம்பாக மீளாய்வு ஆண்டில் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் அறிக்கையின் நிதிச் செயற்பாடுகளையும், முதலீட்டு செயற்பாடுகளையும் நிறுவகம் அறிக்கை இடாமை.

(இ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 15 இல் 14 ஆவது பந்தியின் பிரகாரம் ஸ்திரமற்ற தன்மை அதில் வரவு செலவு அறிக்கையின் பெறுமதிக்கும், உண்மையான பெறுமதிக்கும் இடையில் ஒப்பீட்டோ அல்லது பிரிதொரு நிதி அறிக்கையாகவோ அல்லது நடப்பு காலப் பகுதியில் முன் வைக்கப்படும் நிதி அறிக்கைகளின் வரவு செலவு அட்டவணையின் நிரலாகவோ முன் வைக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகம் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை.

(ஈ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 07 இல் 65 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்தின் தேய்வுப் பெறுமதியில் இருந்து பயனுள்ள ஆயுட் காலத்தைக் கழித்து ஒவ்வொரு ஆண்டும் அறிக்கையிடல் காலப் பகுதி முடிவடையும் திகதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறுவகத்தில் முற்றாக தேய்மானம் ஆகி இறுதியாக ரூ. 49,234,914 பெறுமதியைக் கொண்ட அலுவலக உபகரணங்கள், மரத் தளபாடங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் மின் சாதனங்கள் போன்றவை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் படி மதிப்பீடு செய்யப்பட்ட வழு இலங்கை அரசாங்க பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் 03 இக்கு அமைய சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மீளாய்வு ஆண்டின் நிதி அறிக்கையினுள் உள்சேர்க்கப்பட்ட ரூ. 3,517,995 சட்டத் தரவுத் தளம் (Legal Data Base) – சொத்து தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 20 இல் 117 ஆவது பந்தி இலக்கத்தில் குறிப்பிட்ட பின்வருவன வெளிக்காட்டப்படாமை.

(i) பயன்பாட்டு ஆயுட் காலம் நிச்சயமற்றதா அல்லது நிச்சயமானதா என்பதும், நிச்சயமற்றதாயின் தமது பயன்பாட்டு ஆயுட் காலத்தையோ அல்லது பயன்படுத்தப்பட்ட தேய்வு விகிதத்தையோ

(ii) நிச்சயமற்ற பயன்பாட்டு ஆயுட் காலத்துடன் கூடிய கட்புலனாகாத சொத்துக்களுக்கு பயன்படுத்தும் தேய்மான முறைமை.

(ஊ) மீளாய்வு ஆண்டின் போது செயற்பாடற்ற நிலையில் இருக்கும் இந்த தரவுத் தள அமைப்பு இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 20 இல் பந்தி இலக்கம் 108 இன் பிரகாரம் பயன்பாட்டு ஆயுட் காலம் தொடர்ச்சியாக இருப்பதாக உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சம்பவங்களும், நிலைமைகளும் தொடர்ச்சியாக உள்ளதா என்பதைப் பற்றிய

முடிவுக்கு வருதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலப் பகுதியினுள்ளும் மீளாய்வுக்கு உட்படுத்தி தொடர்ச்சியற்ற பயன்பாட்டு ஆயுட் காலம் நிச்சயமற்ற நிலையில் இருந்து நிச்சயமான நிலைக்கு மாற்றமடையுமாயின், இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்கு மதிப்பீட்டு வேறுபாடாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்படாமை காரணமாக ரூ 3,517,995 இனால் நிறுவகத்தின் சொத்துக்களும், நிதி செயற்திறனும் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 11 இல் பந்தி இலக்கம் 44 இன் பிரகாரம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் மானியங்களை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக அடையாளம் காண வேண்டிய போதிலும், ரூ. 518,400 ஐ மூலதன மானியத்தை இக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அடையாளம் காண நிறுவகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஏ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 03 இல் பந்தி இலக்கம் 41 இக்கு புறம்பாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு கட்டணங்களின் மிகை ஒதுக்கங்களான ரூ. 480,000 மீளாய்வு ஆண்டில் நிதிப் பெறுபேற்று கணக்கெடுப்புக்களில் அடையாளம் காண்பதற்கு பதிலாக, திரட்டிய பற்றாக்குறையில் கழித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறையும், திரட்டப்பட்ட பற்றாக்குறையும் ரூ 480,000 ஆக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 19 இல் 61 மற்றும் 86 ஆகிய பந்திகளின் பிரகாரம் ஸ்திரமற்ற சேவை நன்மை ஒப்படைப்பு கணக்கிடுவதில் ஆயுட் கால முறை அதாவது ஸ்திரமற்ற சேவை செலவினம், பலவீனம் மற்றும் காலத்துக்கு முந்திய ஓய்வு பெறல் சதவீதம், இறப்பு சதவீதம் போன்ற கருதுகோள்களை பாவித்து கணக்கெடுக்க வேண்டிய போதிலும், நிறுவகம் தனது நன்மைகளை கணக்கிடும் போது மேற்படி ஆயுட் கணக்கெடுப்பு முறையைப் பயன்படுத்தாமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 01 இல் பந்தி இலக்கம் 80 (இ) பிரகாரம் அறிக்கையிடல் திகதி முதல் 12 மாதங்களினுள் தீர்க்கப்பட வேண்டியுள்ள பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்களாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும், நிறுவகம் பணிக்கொடை ஒதுக்கங்களுக்குரிய மொத்த பெறுமதியான 1,107,555 ரூபாவான நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் அடையாளம் கண்டிருந்தது. அதன் படி, நிறுவகத்தின் நடைமுறை மற்றும் நடைமுறையற்ற பொறுப்புக்களாக பணிக்கொடை ஒதுக்கங்களை வேறுபடுத்தி அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீண்டு வரும் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்கள் போன்ற வகைப்படுத்தல் கொள்கைகள் மீளாய்வு ஆண்டினுள் வைக்கப்படாத காரணத்தால் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு 141,960 ரூபா பெறுமதியான தேநீர் பொதிகளும், பயணப் பைகளும், நடைமுறையற்ற சொத்துக்களாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வு ஆண்டில் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிறுவகத்தின் 3,057,383 ரூபா சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இருந்த போதிலும், அந்தச் சொத்துக்களின் இருப்பு, உரிமை

மற்றும் பெறுமதி போன்றவற்றை பரிசோதிப்பதற்கான உரிய ஆதாரங்கள் கணக்காய்வுக்காக முன்வைக்கப்படாமை.

(∴) நிலையான சொத்துக்கள் அட்டவணையில் சட்ட தரவுத் தள அமைப்பு (கட்புலனாக சொத்து) உட்சேர்ப்பதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் பெயரெட்டுக் கணக்குக்கு ஏற்ப இருப்பில் உள்ள நிலுவைகளின் திருத்தத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமை.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.நி.அ) அமைய நான் கணக்காய்வுகளை மேற் கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் இது குறித்து மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படையை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானது என்பதும், உகந்தது என்பதும் எனது நம்பிக்கையாகும்.

1.3 நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டறிக்கையினுள் உட்சேர்க்கப்பட்டுள்ள பிற தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின் எனக்கு பெற்றுத் தர எதிர்பார்த்துள்ள நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும் நிதி அறிக்கை மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கை உள்ளடங்காத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதாகக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டும்.

நிதி அறிக்கை தொடர்பிலான எனது அபிப்பிராயத்தினால் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன், நான் அது குறித்து எவ்விதமான உறுதிப்படுத்தல்களையோ அல்லது அபிப்பிராயத்தையோ தெரிவிக்க மாட்டேன்.

நிதி அறிக்கை தொடர்பில் எனது கணக்காய்வுக்கு ஏற்புடைய, மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ள முடிந்த போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதி அறிக்கையுடன் அல்லது கணக்காய்வில் அல்லது ஏனைய விதத்தில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு ஏற்ப போதியளவில் ஒத்துப் போகவில்லையா என்பதை கவனத்தில் கொள்வதே எனது பொறுப்பாகும்.

1.4 நிதி கூற்று கணக்காய்வு தொடர்பில் முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகத் தரப்பினரின் பொறுப்புக்கள் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றானது இலங்கை அரச பிரிவுகளின் கணக்கியல் நியமங்களுக்கு அமைய தயாரித்தல், நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் போன்ற காரணங்களால் ஏற்படக் கூடிய போதுமான தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிக்கத் தேவையான உள்ளக நிர்வாகத்தை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பை பேணிச் செல்லக் கூடிய இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவம் நிறுவகத்தை முடிவுறுத்தவோ அல்லது வேறு வழியில்லாத நிலையில் செயற்பாடுகளை நிறுத்தவோ கருதினாலே தவிர,

தொடர்ச்சியான இருப்பை அடிப்படையாகக் கொண்ட கணக்கு வைத்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை கண்டறிதல் போன்றன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறை தொடர்பில் பரிசீலிக்கும் பொறுப்புக்கள், நிர்வாகத் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஏற்றவாறு சுய வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பற்றுக்கள் தொடர்பில் உரியவாறு கையெடுகளும் அறிக்கைகளும் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

1.5 நிதி அறிக்கை கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக எடுத்துக் கொண்டோமாயின் நிதிக் கூற்றுக்கள் மோசடிகள் மற்றும் தவறுகளால் ஏற்படும் போதுமான பொய்யான கூற்றுக்கள் அற்றதெனும் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கலான கணக்காய்வு அறிக்கையை வெளியிடல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்ட உறுதிப்படுத்தலான போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற் கொள்ளும் போது அது எப்போதும் போதுமான தவறான கூற்றுக்கள் கண்டறியப்படும் என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள், தனியாக அல்லது கூட்டான பாதிப்புக்களால் போதியளவான பொய்யான கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன், அங்கு போதியளவுத் தன்மை இந் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீதான பாதிப்புக்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் அம்சமாக நான் கணக்காய்வின் போது தொழில் தர்மத்துக்கு ஏற்பவும், தொழில் ரீதியாக ஐயமின்றியும் செயற்பட்டுள்ளேன். மேலும் நான்

- தெரிவிக்கப்பட்ட கணக்கியல் அபிப்பிராயத்தை அடிப்படையில் மோசடி அல்லது தவறுகள் போன்ற காரணத்தால் நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதுமான தவறான கூற்றுக்கள் ஏற்படுத்தும் அபாயங்களை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றின் மூலம் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தினேன். தவறாகக் காட்டுவதன் காரணத்தால் ஏற்படக் கூடிய போதுமான பொய்யான கூற்றுக்களின் பாதிப்புக்கள், மோசடிகளால் ஏற்படக் கூடிய பாதிப்பு அவற்றின் பொய்யான ஆவண தயாரிப்பு, வேண்டுமென்றே தவறவிடுதல், தவறாகக் காட்டுதல் அல்லது உள்ளக நிருவாகத்தை தவிர்த்தல் போன்ற காரணங்களால் ஏற்படும் பாதிப்புக்களை விட பாரதூரமானதாகும்.

- உள்ளக நிருவாகத்தின் செயற்திறன் தொடர்பான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் நோக்கில் அல்லாத போதிலும், தகுந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்கு உள்ளக நிருவாகம் பற்றி புரிதலைப் பெற்றுக் கொண்டேன்.

- பாவனை செய்யும் கணக்கியல் தத்துவங்களின் ஏற்புடைமை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்துவம் போன்றவற்றில் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட இணைப்பு வெளிப்பாடுகளின் திருத்தத் தன்மை பாராட்டப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர் இருப்பு குறித்தான போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த கணக்கியலுக்கு நிறுவனத்தின் தொடர் இருப்பு தொடர்பான அடிப்படையை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு தீர்மானித்தேன். போதியளவு நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானம் எடுத்திருந்தால், நிதி அறிக்கைகளில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களில் கவனம் செலுத்த வேண்டியதுடன், அந்த வெளிபடுத்தல்கள் போதியளவாக அமையாது விடில், எனது கருத்தை புறந்தள்ள வேண்டும். ஆயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர் இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதி அறிக்கைகளில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களும், நிகழ்வுகளும் உகந்த மற்றும் நியாயமான முறையில் உட்சேர்க்கப்பட்டிருத்தலும், வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய மொத்த நிதி அறிக்கைகளை முன் வைத்தலும் பாராட்டக்குரியது ஆகும்.

கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வுகள், பிரதான உள்ளக நிருவாக பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பில் நிருவாகத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கு இணங்க, இந்த அறிக்கையில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்துக்கு அடிப்படையான பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களின் கீழ் கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும், விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டதுடன், எனது பரிசீலனைகளில் இருந்து சரியான நிதி அறிக்கைகளை நிறுவகம் பேணிச் சென்றுள்ளதைக் காணக் கூடியதாக இருந்தது.

2.1.2 2018 இல 19 ஐக் கொண்ட கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (இ) (III) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடங்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன.

2.1.3 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (இ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய கடந்த வருடம் நான் வழங்கிய பரிந்துரைகள் நிதிக் கூற்றுக்களில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றிய நடைமுறைகள் மற்றும் பெற்ற ஆதரங்களின் மீது மற்றும் போதியளவான விடய மட்டுப்பாடுகளினுள், பின்வருவனவற்றை தெரிவிக்கும் அளவுக்கேனும் எவையும் என் கவனத்துக்கு உட்படவில்லை.

2.2.1 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் நிருவாக சபையின் குறித்த உறுப்பினர் நிறுவனம் தொடர்பான ஏதேனும் ஒப்பந்தத்துக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பொது வியாபார நிலைக்குப் புறம்பாக தொடர்பு இருப்பதாகவோ.

2.2.2 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர வேறொரு குறித்த எழுத்துருவான சட்டத்துக்கு அல்லது நிறுவனத்தின் நிருவாக சபையினரால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காதவாறு செயற்பட்டுள்ளதாகவோ

விதிமுறைகள்	**அவதானிப்புக்கள்**
(a) 1982 ஆண்டு 43 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் 2008 பெப்ரவரி 01 ஆம் திகதிய 1503/13 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதி விசேட வர்த்தமானி பத்திரம்	25,000 ரூபாவுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கு 25 ரூபா முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 05 சந்தர்ப்பங்களில் 158,100 ரூபா கொடுப்பனவுக்கான முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்காமை.
(b) PE/COP/POLI/Circular இலக்க மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தக சுற்றறிக்கை 01/2021 இலக்கத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 6.6 பிரிவு	2021 ஆண்டின் ஆண்டறிக்கை அறிக்கை 2023 மே மாதம் 24 ஆம் திகதியின் போதும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படாமை.
(c) பொதுத் திறைசேரி செயலாளரின் 2017 ஜூன் 28 ஆந் திகதிய 01/2017 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்று நிருபம்.	சொத்துக்கள் மற்றும் செலவினங்களுக்கான முகாமைத்துவத்துக்கு அரசின் நிதி அல்லாத அனைத்துச் சொத்துக்களையும் அட்டவணைப்படுத்துவதற்கு உரிய 2022 ஆம் ஆண்டின் தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படாது இருத்தல்.
(d) 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 இலக்க பந்தியின் (I)	நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக அந்த நிறுவகத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் நியமிக்கப்படும் தமது உள்ளக கணக்காய்வாரள் இருக்க வேண்டிய போதிலும், நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழுவினுள் உள்ளக கணக்காய்வாளர் பதவி

	உட்சேர்க்கப்படாதிருந்தமை.
(e) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை (i) 232 (2)	மூன்று வவுச்சருக்குரிய பெறுமதிகள் இலக்கத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தமை.
(ii) 272 (3)	இரண்டு கொடுப்பனவு வவுச்சர்கள் கணக்காய்வுக்காக முன்வைக்கப்படாமை..
(f) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டு முதல் மேற் கொள்ள வேண்டியிருந்த சகல பணிக் குழுவுக்கான வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் 2022 ஆம் ஆண்டில் கையொப்பம் இடப்படவில்லை.
(g) பொதுத் திறைசேரி செயலாளரின் 2017 டிசம்பர் 21 ஆந் திகதிய 02/2017 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்று நிருபத்தின் 02 (i) பந்தி.	சுற்று நிருபத்தின் படி நிறுவகம் பாவிக்கும் இரு வாகனங்களின் உரிமை பொறுப்பேற்றப்பட்டு இருக்கவில்லை.
(h) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்று நிருபத்தின் 09 ஆவது பந்தியும், நிதி ஒழுங்கு விதியும் 315(1)	
(i) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 இலக்க அரசாங்க வர்த்தக சுற்று நிருபத்தின் (பொது வர்த்தகம் தொடர்பான வழிகாட்டல் கோவை)	880 ஆவது நிதி ஒழுங்கு விதியின் படி நிறுவகத்தில் பிணை வைக்க வேண்டிய அலுவலகர்களிடமிருந்து பிணையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(i) 2.3 பந்தி இலக்க உபஅட்டவணை I	
(ii) 2.3 பந்தி இலக்க உபஅட்டவணை I	சுற்று நிருபத்தின் பிரகாரம் மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நிறுவகம் நடவடிக்கை மேற் கொள்ளவில்லை.
(iii) 2.3 பந்தி இலக்க உபஅட்டவணை I	செயற்பாட்டுத் திட்டம் நீதி அமைச்சுக்கு 2021 டிசம்பர் 29 ஆம் திகதி சமர்ப்பித்திருந்தமை.
	பிரதான வரவு செலவு அட்டவணையை உள்ளடக்க வேண்டிய உத்தேச வருமான

	அறிக்கை, உத்தேச நிதி நிலை அறிக்கை மற்றும் உத்தேச காசுப் பாய்ச்சல் அறிக்கை போன்றன உள்ளடக்கப்படவில்லை.

2.2.3 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள், மற்றும் பணிகள் போன்றவைக்கு இணங்காதவாறு செயற்பட்டிருப்பதாகவோ

2.2.4 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமான முறையில், வினைத்திறனாகவும், பயனுள்ளவாறும் கால வரையறையினுள், ஏற்புடைய ஒழுங்கு விதிகளுக்கு இணங்க கொள்முதல் செய்யப்பட்டு பாவனை செய்யப்படவில்லை எனவும்

கொள்முதல் வழிகாட்டல்கள் கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் குறைந்தது 03 வருட காலத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட கொள்முதல் நடவடிக்கைகள் அடங்கலான பிரதான கொள்முதல் திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய போதிலும் நிறுவகம் அவ்வாறான திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிறுவகத்துக்காக 26 பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு 07 பதவிகளில் 10 பணியாளர்களின் குறைவு அவதானிக்கப்பட்டது. இது தவிர, 1985 ஆம் ஆண்டில் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் சட்டத்தின் 05 (இ) பந்தியின் படி, நீதித் துறை அலுவலகர்களுக்காக நூலக வசதிகளை வழங்குவது நிறுவகத்தின் முக்கிய நோக்கமான போதிலும், நூலக அதிபர் பதவி மீளாய்வு ஆண்டின் போதும் வெற்றிடமாக இருந்தது. அதன் படி, நிறுவகத்தின் பணிக் குழு தற்கால நிலைக்கு ஏற்ப அமைத்துக் கொள்வதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை பூர்த்தி செய்து கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் நோக்கின் கீழ் நீதி அலுவலகர்கள் தொழில் நிபுணத்துவத்தை விருத்தி செய்து கொள்ளுதல் மற்றும் அவர்களின் அறிவையும், திறனையும் மேம்படுத்தும் நோக்கில் கூட்டங்கள், மாநாடுகள், போதனைகள், செயலமர்வுகள் போன்வற்றை ஏற்பாடு செய்வதற்கும், நடத்துவதற்கும் கடந்த ஆண்டில் போதியளவில் மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒதுக்கப்பட்ட தொகையின் அதிக சதவீதம் தொடர்ச்சியாக எஞ்சி இருந்தது. அதன் படி, நடப்பு ஆண்டினுள் 258,123,930 ரூபா ஒதுக்கத் தொகை 98மூ ஆல் எஞ்சி இருந்ததால் மதிப்பீட்டை தயாரிக்கும் போது அத தொடர்பான யதார்த்த நிலை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

ஒப்பமிட்டது. / டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்